19-1-41 to 9-11-1941 = 3 ...

Phone No. 3249 மலாய் 10-சதம் பர்மா 0-1-6 இலங்கை 7-சதம்

TAMIL MANI REGD. NO. M. 3384

தமிழ் மணி



எல்லாரு மோர்குலம் எல்லாரு மோரினம்
எல்லாரு மிந்திய மக்கள்

[வாரப் பதிப்பு]

எல்லோரு மோர்நிறை எல்லோரு மோர்விலை
எல்லோரும் இந்நாட்டு மன்னர்—பாரதி.

மணி 7 ஓசை 1 | சென்னை—விஷு ஆண்டு ஐப்பசி 24உ ஞாயிற்றுக்கிழமை (9—11—41) | விலை ஒரு அணா

ஏழாம் ஆண்டு

தமிழ் நாட்டுக்கும், தாய் நாட்டுக்கும் தளராது பணி செய்துவரும் "தமிழ் மணி"க்கு, ஆறுவது ஆண்டு பூர்த்தியாகி, ஏழாம் ஆண்டு ஆரம்பித்திருக்கிறது. இதுவரையில் "தமிழ் மணி" உண்மை, உறுதியுடன் ஊழியஞ்செய்து வந்ததுபோல், இந்த ஏழாம் ஆண்டிலும் அஞ்சாது சேவை செய்து வர அன்னை அருள்புரிவாளாக. அன்னையுடன் சேர்ந்து, தமிழ் அன்பர் அனைவரும், "தமிழ் மணி"யை ஆசீர்வதித்து, ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

சோக்கநாதன்

தொடர் கதை

இன்னமும் என்ன சூழ்ச்சி?

தஞ்சை இளவரசியின் அந்தரங்க அறைக்கு வந்த மாயப் பேர்வழியுடன் மோகனா பேசிக்கொண்டிருந்தாள். அந்தச் சமயத்தில் மோகனாவின் அறைக் கதவைத் தட்டும் சப்தம் கேட்டு, இருவரும் திடுக்கிட்டுப் போயினர். மோகனா என்ன செய்வதென்று அறியாமல் திகைத்து நின்றாள்; அவள் அறைக்கு வந்திருந்த மாயப் பேர்வழியைப் பற்றி அவள் பயந்தாளே யொழிய, அவள் சம்பந்தப்பட்டவரையில் அவளுக்கு ஒரு பயமும் இல்லை. வெளியில் சென்று கதவைத் திறப்பதா, இல்லையாவென்று ஆலோசித்துக் கொண்டிருந்த சமயத்தில், அந்தரங்க அறையிலிருந்த மாயப் பேர்வழி எப்படியோ அங்கிருந்து மாயமாக மறைந்தான்; அவன் மறைந்ததும், மோகனா அவசரமாகச் சென்று கதவைத் திறந்தாள்; அவளுக்கு எதிரே சனியன்போல் ரஞ்சிதம் வந்து நின்றாள். அவளைக் கண்டதும் மோகனாவுக்கு வந்த கோபமும், வெறுப்பும் கொஞ்சமல்ல; என்றாலும், அவள் கோபத்தை அடக்கிக்கொண்டு, ரஞ்சிதம் அங்கு வந்ததின் காரணம் என்னவென்று கேட்டாள். ரஞ்சிதம், மோகனாவுக்கு நேரடியான பதில் கொடுக்கவில்லை. அவள் வளைய வளைய ஏதோ சொல்லிக்கொண்டிருந்தாள். ரஞ்சிதத்தின் பேச்சு மோகனாவுக்குப் பிடிக்கவில்லை; அவள் நேரடியான பதில் கூறும்படி சொன்னாள். தஞ்சை ராணியின் நிலைமை ரொம்ப ஆபத்தாக இருப்பதாகவும், இளவரசியை ராணியிடம் அழைத்துச் செல்ல வந்ததாகவும் ரஞ்சிதம் சொன்னாள். இதைக் கேட்டதும், இரு தலைக் கொள்ளி எறும்பின் நிலைமையிலிருந்து மோகனா திண்டாடினாள்; ரஞ்சிதத்தை அறையில் விட்டு வைத்தால் ஆபத்து என்பது அவளுக்குத் தெரியும். அவள் அறைக்கு வந்திருந்தவனை அங்கு தனிமையாக விட்டுச் செல்லவோ அவள் மனம் துணியவில்லை. இந்தத் தர்ம சங்கடமான நிலைமையிலிருந்து மோகனா தவித்துக் கொண்டிருந்தபோது, அங்கு பாட்டி வந்தாள்; ரஞ்சிதம் கூறியதுபோல், ராணி அவ்வளவு மோசமான நிலைமையில் இல்லையென்று சொன்னாள்.

மோகனாவுக்கு அப்பொழுதுதான் ரஞ்சிதத்தின் சூழ்ச்சி இன்னதென்று தெரிந்தது. உடனே அங்கிருந்து ரஞ்சிதத்தைப் போகும்படி உத்திரவு போட்டாள். கமலம் தனிமையாக இருப்பாளென்று சொல்லி, பாட்டியையும் உடனே கமலத்தின் அறைக்குப்போகும்படி சொன்னாள். மோகனா சிறிது நேரம் நித்திரை செய்து இளைப்பாறியபின், அவளே கமலத்தின் அறைக்கு வந்து, பாட்டியுடன் சேர்ந்து ராணியைப் பார்க்கச் செல்லலாமென்று கூறினாள். பாட்டியும் அதற்கு இசைந்து, மோகனாவின் அறையிலிருந்து போய் விட்டாள்.

பாட்டி போனதும், மோகனா கதவைத் தாழிட்டுவிட்டு, நேரடியாக அந்தரங்க அறைக்குச் சென்றாள். அங்கு அந்த மாயப் பேர்வழியைத் தேடினாள்; அவனைக் காணவில்லை. அந்தரங்க அறையைப்பூட்டிவிட்டு, அவள் படுக்கை அறைக்குச் சென்றாள். அங்கு அவளுக்காக அந்த மாயப் பேர்வழி காத்திருந்தான்; அவனைக் கண்டதும், மோகனா ஆச்சரியமடைந்து, அந்த அறைக்கு அவன் எப்படி வந்தான் என்று கேட்டாள்; அவன் உண்மையைச் சொல்லவில்லை; அவனுக்கு ஒரு ரகசிய வழிதெரியுமென்று சொன்னான். மோகனா அறியாத ஒரு ரகசிய வழி இருந்தால், அதனால், மோகனாவுக்கு ஆபத்து வரக் கூடுமென்று மோகனா சொன்னாள். அதைக் கேட்டதும் மாயப் பேர்வழி வருந்தினான். மோகனா உயிருக்கு ஆபத்து வரப் பார்த்துக் கொண்டிருக்கப் போவதில்லையென்று உறுதிகூறினான். இன்னம் சிலதினங்களுக்கே இந்த கஷ்டமென்றும், அதன்பின் என்ன நேருமோ கடவுளுக்கே வெளிச்சம் என்று சொல்லிக் கண்ணீர் வடித்தான். அவன் கண்ணீரைக் காணச் சகியாத மோகனாவும், கண்ணீர் வடித்து, அவனைக் கட்டிப்பிடித்துக்கொண்டுதேம்பியழுதாள். மோகனாவின் கண்ணீரைக் கண்ட அவன், இன்னமும் அதிகமாகக் கலங்கினான்; கண்ணீர் வடிப்பதை நிறுத்திவிட்டு, மோகனாவின் கண்ணீரைத் துடைத்து,

"மோகனா, கண்ணே! அஞ்சாதே! என் உயிருள்ளவரையில் உனக்குத் துரோகஞ் செய்யமாட்டேன்! உங்களைப் பாதுகாத்தே தீருவேன்; இன்றேல்,......இந்தத் தஞ்சையையே அழித்துப் பஸ்பமாக்கிவிடுவேன்!... இது சத்தியம்..." என்று சொல்லிவிட்டு, மறு விநாடியில் மோகனாவின் பிடியிலிருந்து தப்பித்துக்கொண்டு மறைந்தான்! மோகனாவுக்கு அவன் மறைந்ததே தெரியாது; அவள் சோர்ந்து போய் படுக்கைக்குச் சென்றாள்; அவளுக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. படுக்கையில் சிறிது நேரம் அங்குமிங்கும் புரண்டு அழுது கொண்டிருந்தாள்; அவள் விதியை நினைத்து வருந்தினாள்; அவள் விதியை மட்டுமல்ல, தஞ்சை அரச வம்சத்துக்கே ஏற்பட்ட கஷ்டங்களை எண்ணிக் கலங்கினாள்; அவர்கள் கதி என்னவாகுமோ வென்று நினைத்து ஏங்கினாள். இறந்த அவள் அன்னையை மனக் கண் முன் நிறுத்திக் கண்ணீர் வடித்தாள். ஒருவாறு மனந்தேறி, படுக்கை அறையிலிருந்து அந்தரங்க அறைக்குச் சென்றாள். அங்கு மீண்டும் அந்த மாயப் பேர்வழியைத் தேடினாள்; அவனை அங்கு காணவில்லை; மோகனா திகைத்துப் போய் அங்கிருந்த சோபாவில் உட்கார்ந்து, தீவிர யோசனை போட்டுக் கொண்டிருந்தாள்.

நெடுநேரமாகியும் அவளைத் தேடி யாரும் வரவில்லை; மாயப் பேர்வழி கூட வரவில்லை; இதற்குள் நன்றாகப் பொழுது விடிந்துவிட்டது. மோகனா உடனே அங்கிருந்து புறப்பட்டுக் கமலத்தின் அறைக்குச் சென்றாள். அங்கு பாட்டியும், கமலமும் மோகனாவுக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள். மோகனா புன்சிரிப்புடன் சென்ற போதிலும், கமலத்தின் கூரிய கண்களுக்கு மோகனா தப்பி விடவில்லை; மோகனா கண்ணீர் வடித்திருக்கக் கூடுமென்பதைக் கமலம் தெரிந்துகொண்டாள். மோகனா கண்ணீருக்குக் காரணமென்ன? மோகனா கமலத்திடம் விடைபெற்றுக்கொண்டு சென்றபோது, திடசித்தத்துடனே போனாள்; அவ்வாறு சென்றவள் கலங்கிக் கண்ணீர் வடிக்கக் காரணம் ஏதேனும் இருக்கக்கூடுமென எண்ணி, மெதுவாக மோகனாவிடம் பேச்சுக் கொடுத்தாள்.

"அக்கா...நன்றாகத் தூங்கினீர்களா?..."

"ஆம்...கமலம்...ஆம்......தூங்கினேன்..."

"அக்கா...என் பக்கத்தில் வந்து உட்காரக் கூடாதா?..."

"ஏன் கமலம்?...இதோ வந்து உட்காருகிறேன்......என்ன விசேஷம்?..."

"ஒன்றுமில்லை...ஆனால்...ஆனால், உங்கள் முகத்தைப் பார்த்தால்... நீங்கள்..."

"கமலம் உனக்கு எப்பொழுதும் இந்தச் சந்தேகந்தான்!..."

"சந்தேகம் ஒன்றுமில்லை...ஆனால், உங்கள் முகம்......இன்று என்னமோ?"

"ஆமாம்...நீ முகக் குறி ரொம்பக் கண்டவள்!...சும்மா வாயை மூடிக் கொண்டிரு..."

"அக்கா...நீங்கள் தூங்கவில்லை... ரொம்பச் சஞ்சலப்பட்டிருக்கிறீர்கள் நீங்கள் கண்ணீர் வடித்திருக்கிறீர்களென்று நான் நிச்சயமாகச் சொல்லுவேன்..."

"கமலம்...அப்படி ஒன்றுமில்லை... நீதான்......" என்று சொல்லி மோகனா புன்னகை செய்தாள். என்றாலும், கமலம் திருப்தியடையவில்லை. அவள் மனம் துடித்தது; அவள் உயிருக்குயிராக நேசித்த மோகனாவுக்கு ஏதோ புதிய சங்கடம் ஏற்பட்டிருப்பதாக எண்ணி வருந்தினாள்; ஆகவே, மோகனாவிடமிருந்து உண்மையை அறிந்துகொள்ள நினைத்தாள்.

"அக்கா......என்னிடம் உண்மையை மறைக்கவேண்டாம்...உங்களுக்கு நேர்ந்த சங்கடமென்ன?... நீங்கள் என்னிடம் உண்மையைச் சொல்லாவிடில் என் மனம் சங்கடப்படும்....உண்மையைச் சொன்னால் நமக்கு வரக்கூடிய ஆபத்துக்கு இப்பொழுதே தடை போட்டுவிடலாம்..."

"அப்படி ஒரு ஆபத்தும் வந்துவிடவில்லை...நீ அனாவசியமாகப் பீதியடையவேண்டாம்..."

"அப்படியானால் நீங்கள் ஏன் கண்ணீர் வடித்தீர்கள்?..."

"நான் கண்ணீர் வடித்தேனென்று என் முகத்தில் எழுதியிருக்கிறதா?"

"ஆம்;...நன்றாக எழுதியிருக்கிறது!..."

"சரி இருக்கட்டும்...நீ நினைப்பது போல் நான் கண்ணீர் வடித்து அழுதேன் என்றே வைத்துக்கொள்... அதனால் குடி முழுகிப் போய் விடுமா?..."

(15-ம் பக்கம் பார்க்க)

சி. எம். சாமி

மன்மதக் குளிகை

உபயோகியுங்கள்.

தாது புஷ்டியைக் கொடுப்பதில் இதற்கு மிஞ்சின அமிழ்தம் இல்லை. இதை உபயோகித்தவர்கள் இரத்தவிருத்தி, தாதுபுஷ்டி தேகபலம், ஆரோக்கியம் முதலியவைகள் பெற்று இம்மருந்தின் குணத்தைப் பாராட்டி நற்சான்றளித்திருக்கின்றனர். இது சரீரத்திலுள்ள எவ்வித கோளாறுகளையும் நீக்கி உடலின் ஒவ்வொரு பாகத்தையும் வலுப்பெறச் செய்கிறது. இது தாது க்ஷீணமுள்ளவர்களுக்கு மிகவும் அவசியமான மருந்துதான். ஒரே குளிகையில் ஆண்மை.

எழுதுங்கள் இன்றே. 20 குளிகை விலை ரூ. 2—0—0.

தலைமை ஆபீஸ்:—

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி S. I.

பிராஞ்சு:- (1) 2-88 அய்யா முதலி தெரு, சிந்தாதிரிப்பேட்டை, மதராஸ்
,, (2) 195, செட்டியார் தெரு, கொழும்பு.



மனோரதம்

சிருஷ்டியின் அதிசயம்!

கடவுள் செய்த கொடுமை!

தலைகீழாகப் புரண்டுவிடாதா?

பட்டதெல்லாம் போதும்!

போடுவார் குட்டிக்கரணம்!

கடவுள் சிருஷ்டியில் ஒரு பெரிய அதிசயம் என்ன தெரியுமா? சிருஷ்டிகளுக்கு எல்லா உரிமையும் கொடுத்த கடவுள், ஒரு பெரிய கொடுமையைச் செய்துவிட்டார்! சிருஷ்டிகளின் எதிர்காலம் என்னவென்பதை அறிந்து கொள்ளும் உரிமையைச் சிருஷ்டிகளிடமிருந்து பறித்துவிட்டார்! அதுவும் நன்மைக்கே! கடவுள் அந்த உரிமையை பறித்திருக்காவிடில், உலகம் இப்படி இருக்குமா? உலகம் தலைகீழாகப் புரண்டுவிடாதா? எதிர்காலம் என்னவென்பதை அறிந்து கொள்ள முடியாத நிலைமையிலிருக்கும்போதே, உலகத்தைக் கைப்பற்றப் பெரிய போராட்டங்களை நடத்தித் தங்களுக்கே வெற்றியென்று இடித்துக்கொள்ளும்போது, வெற்றி நிச்சயமெனத் தெரிந்தால், சும்மா இருப்பார்களா? யுத்தத்துக்குமேல் யுத்தஞ்செய்து, குட்டிக் கரணம் போட்டாவது உலகத்தை ஜெயிக்க மாட்டார்களா? ஏன்? இந்த யுத்தத்தையே எடுத்துக் கொள்ளுவோம்; வெற்றி யாருக்கு என்பது நிச்சயமாகத் தெரியாது. ஹிட்லருக்கும் தெரியாது; ஸ்டாலினுக்கும் தெரியாது; சர்ச்சிலுக்கும் தெரியாது; என்றாலும், வெற்றி தனக்கேயென்று ஒவ்வொருவரும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். யாருக்கு வெற்றியோ, அது எனக்குத் தெரியாது; கடவுளுக்குத்தான் தெரியுமோ என்னமோ அதுவும் சொல்ல முடியாது. கடவுளுக்குத் தெரிந்தாலும் ஒன்றுதான், தெரியாமல் போனாலும் ஒன்றுதான். அவர் யாரிடமாவது சொல்லப்போகிறாரா? இல்லை.

ஃ ஃ ஃ

யார் வெற்றி யடைந்தாலுஞ் சரி; அல்லது, தோல்வி யடைந்தாலுஞ் சரி; யுத்தம் எப்படியும் ஒரு முடிவுக்கு வந்துதான் தீர வேண்டும்; இப்படியே யுத்தம் போய்க்கொண்டிருக்க முடியாது. வெற்றி, தோல்வியைப்பற்றிக் கூற முடியாதுபோயினும், ஒன்று மட்டும் நிச்சயமாகச் சொல்ல முடியும்; இந்த யுத்தத்தில் சமரசம் என்பது மட்டும் இல்லவே இல்லை. கடைசிவரையில், இரண்டிலொன்று பார்த்துவிடத் தீர்மானித்திருக்கிறார்களே யொழிய, சமரசஞ்செய்து கொள்ள எந்த நாடும் தயாராக இல்லை; பிரிட்டனும் தயாராக இல்லை; பல லக்ஷக் கணக்கான மக்களையும், பிரதேசங்களையும் பலி கொடுத்த ரஷியாவும் தயாராக இல்லை; பல லக்ஷக்கணக்கான மக்களையும், கோடானகோடிப் பொருளைத் தத்தஞ் செய்து பல நாடுகளை ஜெயித்த ஜெர்மனியும் தயாராக இல்லை. சமரசம் ஏற்பட்டால் யுத்தமில்லை; வெற்றி தோல்வி இல்லை; ஜெயித்த தேசங்களை எப்படிப் பங்கு போட்டுக்கொள்ளுவதென்பதில் ஒரு முடிவுக்கு வர முடியாது; தகராறு ஏற்பட்டே தீரும்; அந்தத் தகராறு மீண்டும் மற்றொரு பெரிய யுத்தத்தில் கொண்டு போய்த்தான் விடும். ஆகவே, சமரசம் ஏற்படாது; ஏற்படவும் கூடாது. இந்த யுத்தத்தில் இரண்டிலொன்று பார்த்துவிடுவதுதான் நல்லது; அப்பொழுதுதான் இனிமேல் யுத்தம் தொடர்ந்து நடக்காமலிருக்கும்; யுத்தத்துக்குச் சிறிது காலமாவது முட்டுக் கட்டை போட்டு வைக்கலாம். சமரசம் ஏற்படுமேயானால், மற்றொரு யுத்தம் நிச்சயம்; யுத்தம் வந்தால் உலகம் என்ன பாடுபடும்? இந்த யுத்தமே போதும் போதுமென்றாகிவிட்டது; பட்டதெல்லாம் போதும், பட முடியாது இனித் துயரம்!

ஃ ஃ ஃ

நிச்சயம் தோல்வி என்பதை அறிந்தாலொழிய ஜெர்மனியோ, பிரிட்டனோ, அல்லது, வேறு எந்த நாடோ, ஒரு சமரசஞ் செய்து கொள்ளத் துணியாது. பிரிட்டனை நம்பி, அல்லது, பிரிட்டனுடன் சேர்ந்த பாவத்துக்காகப் போலந்து, நார்வே, டென்மார்க், ஹாலந்து, பெல்ஜியம், பிரான்ஸ், யுகோஸ்லாவியா, கிரீஸ், முதலிய நாடுகள் இன்று ஜெர்மனிக்கு அடிமைப்பட்டுக் கிடக்கின்றன. அந்த நாடுகளுக்கு, ஜெர்மனி சுதந்திரம் கொடுக்குமென்பது என்ன நிச்சயம்? அந்த நாடுகளுக்குச் சுதந்திரம் கிடைக்காதவரையில், பிரிட்டன், ஜெர்மனியுடன் சமரசஞ் செய்து கொள்ள ஒரு போதும் ஒப்புக் கொள்ளாது. அப்படி ஒப்புக்கொள்ளுமேயானால், பிரிட்டனின் மானமே போய்விடும்; இது பிரிட்டனுக்குத் தெரியும்; இதுவரையில் வெற்றி ருசி கண்ட ஜெர்மனி, கடைசிவரையில் இந்தப் போராட்டத்தை நடத்தியே தீரும்; சமரசத்துக்கு ஒப்புக் கொள்ளாது. ஆனால், ஒரு விஷயம்; ரஷியாவை, ஜெர்மனி ஜெயித்தபோதிலும், அது ஜெர்மனிக்கு வெற்றியாகாது; பிரிட்டனை ஜெயித்தாலொழிய, ஜெர்மனியின் வெற்றி, பரிபூர்ண வெற்றியாகாது. பிரிட்டனை ஜெயிப்பதுதான் ஜெர்மனிக்குப் பரம சங்கடமாக வந்து முடியும்; அதன்பின்தான் வெற்றி தோல்வியை நிர்ணயிக்க வேண்டும்; அதுவரையில் ஒரு முடிவும் சொல்ல முடியாது.

ஃ ஃ ஃ

ரஷியாவில்தான் இன்று யுத்தம் கடுமையாக இருக்கிறது. அங்கு ஜெர்மனியரே வெற்றிபெற்று வருகிறார்கள். லெனின்கிராட் போராட்டம் இதுவரையில் மந்தமாக இருந்தது; அங்கு ஜெர்மனியர் மீண்டும் சுறு சுறுப்புடன் போராட்டத்தை ஆரம்பித்திருக்கிறார்கள்; லெனின்கிராடில் ஜெர்மனியருக்கும், ரஷியருக்கும் மாறி மாறி வெற்றி தோல்வி கிடைத்து வருகிறது. லெனின்கிராட் இன்னமும் வீழ்ச்சியடையவில்லை. அங்கிருந்து மாஸ்கோவைச் சூழ்ந்துகொள்ள வந்த ஜெர்மன் ராணுவங்கள், காலனின் என்னுமிடத்தில் ரஷிய ராணுவங்களைத் தீவிரமாக எதிர்க்க வேண்டியதாயிற்று. காலனின் போர்முனையில் ஜெர்மனியருக்குப் பெரும் நஷ்டம்; ரஷியருக்கும் அபார நஷ்டம். அங்கும் தீவிரமான போராட்டம் நடந்து வருகிறது. மாஸ்கோ அரங்கத்திலும் போர் ரொம்பத் தீவிரமாக இருக்கிறது. அங்கு ஜெர்மனியர் ஏராளமான ராணுவங்களைக்கொண்டு வந்து குவித்து வருகிறார்கள்; டாங்கிகளைக் கொண்டு, அரண்கள் செய்து, அந்த அரண்களுக்குப் பின்னலிருந்து பீரங்கிகளால் ரஷியரை எதிர்த்து வருகிறார்கள். பனியும், கொட்டு, கொட்டு என்று கொட்டிக் கொண்டுதானிருக்கிறது. மாஸ்கோ போராட்டத்தைக் கிள்ளுக்கீரையென நினைத்த ஜெர்மனியர், அங்கு நடுத்திட்டில் அகப்பட்ட நரிபோல் நின்று திண்டாடுகின்றனர்! ஜெர்மனியர் தீவிரமாகப் போராடி, மாஸ்கோ, லெனின்கிராட், ராஸ்டாவ் போன்ற நகரங்களைக் கைப்பற்றிக்கொள்ளலாம். ஆனால், அந்த நகரங்களைக் கைப்பற்றுவதால் ரஷியாவைக் கைப்பற்றியதாகிவிடுமா? மாஸ்கோ முதலிய நகரங்களைக் கைப்பற்றியபின் ஜெர்மன் ராணுவங்கள் ரஷியாவுக்குள் இறங்குமேயானால், ரஷியப் போராட்டத்துக்கு முடிவில்லாமலே போகும். இன்னம் 2,000 மைல் தூரம் போராடிக் கொண்டு போகவேண்டியதுதான்; போவதோ பெரும் சிரமம். மாஸ்கோ லெனின்கிராட் நகரங்களைக் கைப்பற்றுவதுடன் யுத்தத்தை நிறுத்திவிடவும் முடியாது. ஆனால், ஹிட்லர் போக்கும், திட்டமும் எப்படி இருக்கிறதோ சொல்ல முடியாது. ஒருவேளை மாஸ்கோ விழுந்தால், அவர் நோக்கம் என்னவென்பதை இலகுவில் தெரிந்து கொள்ளலாம்.

ஃ ஃ ஃ

மாஸ்கோவுக்குத் தென் கிழக்கிலுள்ள டூலா என்னுமிடத்திலும் போராட்டம் ரொம்பக் கடுமையாக இருக்கிறது. டூலா முக்கியமான கைத்தொழிற்சாலைகள் நிறைந்த இடம்; இந்த நகரைக் கைப்பற்றித் தென்கிழக்கே சென்று, மாஸ்கோவை வளைத்துக் கொள்ள ஜெர்மனியர் நினைக்கிறார்கள்; வளைப்பதும், கிட்டி போடுவதும் ஜெர்மன் ராணுவங்களின் போர்த் திறமை. அது மட்டுமல்ல; சமய சந்தர்ப்பத்தைக் கவனித்துப் போராட்டத்தை நடத்துகிறார்கள். லெனின்கிராடைத் தாக்கிக்கொண்டிருக்கும் சமயத்தில், திடீரென அங்கு போராட்டத்தை நிறுத்திவிட்டு, வேறு இடத்தில் போராட்டத்தைத் தீவிரப்படுத்துவது வழக்கம். எந்தப் போர் முனை பலவீனமாக இருக்கிறதோ, அந்த இடத்தைப் பார்த்துத் தீவிரமாகத் தாக்குகின்றனர். மாஸ்கோவில் ரஷியர் கவனஞ் செலுத்துவதால் திடீரென லெனின்கிராட்மீது ஜெர்மனியர் கவனஞ் செலுத்துகிறார்கள்; அங்கு ரஷியர் தீவிரமாக இருக்கும்போது, டூலாமீது பாய்ந்தனர். இவ்வாறு மாறி, மாறி ஒவ்வொரு பக்கமாகத் தாக்கிக்கொண்டே முன்னேறிச் செல்லுகின்றனர்.

ஃ ஃ ஃ

அடுத்த போர் அரங்கம், தெற்கே கருங்கடலிலுள்ள கிரிமியாத் தீவு;

(அடுத்த பக்கம் பார்க்க)

தூக்கமே மனிதனின் உயிர் நாடி!

நல்ல தூக்கத்துக்கு கொசு வலை அவசியம்

நான்கு புறங்களும் தைக்கப்பட்டு, உபயோகத்திற்குத் தயார்.

நிறம்:-வெள்ளை

நீளம்		அகலம்		உயரம்	விலை	1-ம் தரம்	2-ம் தரம்
78'	x	42'	x	42''	,,	3 0 0	2 4 0
78'	x	43''	x	52''	,,	3 8 0	2 12 0
84'	x	52'	x	52''	,,	4 4 0	3 4 0
84''	x	52	x	60''	,,	5 0 0	4 0 0

கைத்தறியில் செய்யப்பட்ட துவாலைகள் எங்களிடம் விலை சரசமாய் கிடைக்கும்.

(பாக்கிங், தபால் சிலவு பிரத்தியேகம்)

G. L. மிக்கேல் & கம்பெனி, அரிசிப்பாளையம், சேலம் S. I.

மனோரதம் ★ (முன் பக்கத் தொடர்ச்சி)

எப்படியும் எட்டிப் பார்ப்பார்!

செக்குப் பிள்ளையார்!

பெரிய மாயம்!

மயக்கம் தெளியுமா?

இது ரொம்ப முக்கியமான இடம்; இங்குதான் முக்கியமான ரஷிய கடற்படைத் தளம் இருக்கிறது. ரஷியாவின் சிறந்த கடற்படை இங்கிருந்துகொண்டுதான் ஒடிஸ்ஸா துறைமுகத்தை ஜெர்மனியர் இலகுவில் கைப்பற்றிக்கொள்ள விடாமல் எதிர்த்துத் தாக்கி வந்தார்கள். கருங்கடல் மூலம், கிரிமியாத் தீவைத் தாக்கும் சக்தி ஜெர்மனிக்கு இல்லை; கருங்கடலில் ஜெர்மனியருக்குப் போதிய கடற்படை கிடையாது; விமானப் படைகளைக்கொண்டு தாக்குவதாக இருந்தாலும், ரஷிய விமானப் படைகள், ஜெர்மன் விமானப் படைகளுக்குச் சப்பட்டையல்ல; ஆகவே, ஜெர்மன் ராணுவங்கள் தந்திரமாகத் தரைமார்க்கமாக வந்து, கிரிமியா தீவைச் சூழ்ந்துகொண்டன. அந்தத் தீவைச் சூழ்ந்துகொண்டதும், ஜெர்மன் விமானப் படைகள் கிரிமியாவைத் தாக்கின. இரு பக்கமும் தாக்கவே ரஷியப் படைகள், சிதற வேண்டியதாயிற்று. தரைமார்க்கமாக வந்த ஜெர்மன் ராணுவங்கள், பெரிகோப் வழியாக வந்து, சிம்மரப்போல் என்னும் முக்கிய நகரத்தைப் பிடித்துகொண்டன. இது, செபஸ்டபுலுக்குச் சுமார் 20 மைல் தூரத்திலிருக்கிறது. அஸாவ் கடலிலுள்ள மற்ருெரு முக்கியமான கெர்ச் என்னுமிடத்தையும் ஜெர்மனியர் கைப்பற்றி இருக்கிருர்கள். செபஸ்டிபுல் ரஷ்யர் கடற்படைத் தளம்; ரஷியருக்கு மிக அவசியமான துறைமுகம். அதை நன்கு பலப்படுத்தியிருக்கிருர்கள். கருங்கடலில் ரஷியர் ஆதிக்கம் இருப்பதற்குக் கிரிமியாத் தீவும், செபஸ்டபுல் துறைமுகமுமே முக்கிய காரணம். ஆகவே, அதைப் பாதுகாக்க போரிட்டுத்தான் தீருவார்கள். கருங்கடலிலுள்ள மற்ருெரு துறைமுகமாகிய நோவொரோஸ்ஸிக் என்னுமிடத்தையும் ஜெர்மனியர் கைப்பற்றியிருக்கிருர்கள். இது செபஸ்டபுலுக்கு நேர் கிழக்கே இருக்கிறது. காகாஸஸ் போக இது உதவியாக இருக்கும். இங்கிருந்து கொண்டு, மற்ருெரு முக்கிய துறைமுகமாகிய ராஸ்டாவ் என்னுமிடத்தை வளைத்துக் கொள்ளமுடியும்; தென் கிழக்கிலிருந்தும், மேற்கிலிருந்தும் ராஸ்டாவைச் சூழ்ந்துகொள்ள ஜெர்மனியர் திட்டம் போட்டிருக்கிருர்கள். ராஸ்டாவ் நகருக்கு வரும் எண்ணெய்க் குழாய்களையும் இலகுவில் கத்தரித்துவிட ஜெர்மனியால் முடியும். ரஸ்டாவையும் கைப்பற்றிக் கொண்டால், அப்புறம் காகாஸஸ் பிரதேசத்துக்குள் ஜெர்மனியர் பிரவேசிக்கலாம்! ஜெர்மன் ராணுவங்களின் நோக்கம் காகாஸஸ் பிரதேசம் என்பதை அறிந்து, அங்கு ரஷியர் பெரிய அரண்களை அமைத்து, ஜெர்மன் ராணுவங்களை எதிர்க்கத் தீவிரமான ஏற்பாடு செய்திருக்கிருர்கள். கருங்கடல் ஓரத்திலும். துருக்கி எல்லை ஓரத்திலுந்தான் இந்த அரண்கள் பலமாக இருக்கின்றன. ஆகவே, காகாஸஸ் பிரதேசத்தில் ஜெர்மனியர் சுலபமாகப் புகுந்துவிட முடியாதென்று, ஒரு பெரிய ராணுவ நிபுணர் கூறுகிருர்.

ஃ ஃ ஃ

கிரிமியாவில் ஜெர்மனியரும், ரஷியரும் தீவிரமாகப்போரிட்டனர். வெகு கஷ்டத்துடன்தான் ஜெர்மனியர் கிரிமியா தீவின் பெரும்பாகத்தை ஜெயித்தார்களென்று சொல்லலாம். சுமார் 90,000 ஜெர்மனியர் அங்கு பலியானதாக ரஷியர் சொல்லுகிருர்கள். அப்படியானல், ரஷியரும் சுமார் 1,00,000 பேர்களைப் பலிகொடுத்திருக்கலாமென்பதில் சந்தேகமில்லை. காகாஸஸ் பிரதேசத்துக்கு வழி செய்து கொள்ளவே, ஜெர்மனியர் இவ்வளவு பேர்களைப் பலி கொடுத்திருக்கிருர்கள். இன்னம் எத்தனை லக்ஷம் பேர்களைப் பலி கொடுத்தாவது ஜெர்மனியர் காகாஸஸ் பிரதேசத்துக்குள் பிரவேசித்தே தீருவார்கள். காகாஸஸ் பிரதேசத்திலுள்ள பக்கூ எண்ணெய்க் கிணறுகளை நெருங்கியபின, ஜெர்மனியர் திரும்புவார்களென்று யாரும் நினைக்க முடியாது. நினைப்பதற்கு வழி இல்லை. ஆனல், மாஸ்கோ யுத்தமோ, லெனின்கிராட் யுத்தமோ தொடர்ந்து நடக்குமா? தொடர்ந்து நடக்கத்தான் செய்யும். அங்கு ரஷியர் கவனத்தைக் கவர்ந்துகொண்டே காகாஸஸ் பிரதேசத்தைநோக்கி ஜெர்மனியர் போய்க்கொண்டே இருப்பார்கள். ரஷியாவை ஜெயிக்க வேண்டுமென்ற எண்ணம் ஜெர்மனியருக்கு இல்லாமலிருக்கலாம். ஆனல் ரஷிய எண்ணெய்க் கிணறுகள் மீது, ஜெர்மனியருக்குக் கண் இருந்துகொண்டுதானிருக்கிறது. ரஷிய ராணுவங்களை நசுக்கவேண்டுமென்ற எண்ணமும் ஜெர்மனிக்கு உண்டு. ஏனெனில், ரஷியா திடீரென்று ஜெர்மனிமீது பாயலாம் என்ற பயமிருந்துகொண்டிருந்தது. ஆகவே, ரஷிய ராணுவங்களை சிதைத்துச் சின்னபின்னமாக்க ஜெர்மனியர் நினைத்தார்கள்; அதில் ஓரளவு வெற்றி பெற்றுவிட்டார்கள். ரஷியாவைச் சும்மா விட்டுவிட்டு ஜெர்மனி கிழக்கிலோ, அல்லது, மேற்கிலோ அதாவது, பிரிட்டன்மீதோ படையெடுத்திருக்குமேயானல், ஜெர்மனியை, ரஷியா பின்னலிருந்து தாக்கியே தீரும்; அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டிருந்தால், ஜெர்மனி கட்டாயம் முறியடிக்கப்பட்டிருக்கும்; அவ்வித நிலைமை ஏற்படக் கூடாதென்பதற்காகவே, ஜெர்மனி வலிய ரஷியாவைத் தாக்கி, ரஷிய ராணுவங்களைச் சிதைத்து, ரஷியாவை முறியடித்து வருகிறது. மாஸ்கோவைக் கைப்பற்றுவதோடு ரஷிய யுத்தத்தை நிறுத்திக்கொள்ளலாம்; ஆனல், காகாஸஸ் பிரதேசத்தை எட்டியும் பார்க்காமல் ஜெர்மனியர் யுத்தத்தை நிறுத்திவிடமாட்டார்கள். காகாஸஸ் பிரதேசத்தைக்கைப்பற்றி, பக்கூ எண்ணெய் கைக்கு வந்ததும், கிழக்கே ஒரு பெரிய போராட்டத்தை ஆரம்பிக்கலாம். ரஷியாவைத் தாக்குவதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணம். ரஷியக் காகாஸஸ் பிரதேசத்தின் வழியாக இரான், இராக் முதலிய இடங்களைத் தாக்கி, அங்கிருந்து, சூயஸ் கால்வாயை வளைத்துக்கொள்ள முற்படலாம். அதே சமயத்தில் லிபியா போராட்டத்தை ஆரம்பித்து, எகிப்துக்கு வந்து, சூயஸ் கால்வாயை மற்ருெரு பக்கம் சூழ்ந்து கொள்ளலாம். இதுதான் ஹிட்லரின் எதிர்காலப் போர் திட்டமாக இருக்கலாமென்பதில் சந்தேகமில்லை. இது ஆபத்தான ஒரு திட்டம்; கிழக்கே, அதாவது, இந்தியாவுக்கு அருகில் ஒரு கடுமையான போராட்டம் நடைபெறலாம். அந்தப் போராட்டம் இந்தியாவுக்கு ஆபத்தாக வந்து முடிந்தாலும் முடியலாம். இவ்வளவு பெரிய ஆபத்து இந்தியாவைச் சூழ்ந்திருந்தும், பிரிட்டிஷார், இந்தியர் சுதந்திர சம்பந்தமாக ஒரு முடிவுக்கும் வராமல், செக்குப் பிள்ளையார் போல், ஆடாமல், அசையாமலிருப்பது ஆச்சரியமல்லவா? ஆம்; ஆச்சரியத்திலும் பெரிய ஆச்சரியமே! சிருஷ்டியின் மாயத்திலும் பெரிய மாயமென்றுதான் சொல்லவேண்டும்! இந்த மாய மயக்கத்திலிருந்து பிரிட்டன் தெளிந்தாலொழிய, இந்தியாவுக்கோ, பிரிட்டனுக்கோ நல்ல காலமில்லை.

சக்தி அப்ரேக்

நீர் ரோக சஞ்சிவி

அதிக மூத்திரம், நீரில் சர்க்கரை. நாவரட்சி முதலியவைகளை 20 நாளில் பூர்ண சௌக்கியப்படுத்தும்

விவரங்களுக்கு:

சக்தி நிலையம்,

S. S. பிள்ளை தெரு, அத்திக்குடி.

LEPROSY, ASTHMA & T. B. SPECIALIST.

எனது சகோதரர் நாடிப் பரீக்ஷையில் மகா நிபுணர் வைத்தியபதி

R. M. கருப்புசாமி பிள்ளை.

எமது சென்னை வைத்தியசாலையில் இருக்கிருர்.

உங்கள் குடும்பத்தில் யாருக்கு என்ன வியாதியிருந்தாலும் சரி! அவரிடம் நேரில் வந்து கன்சல்ட் செய்யுங்கள். நேரில் வர முடியாதவர்கள் வியாதியை எழுதினல் மருந்துகள் V. P. P யில் அனுப்புவார்கள். [கன்சல்டிங் பீஸ் இல்லை]

கன்சல்டிங் நேரம் } காலை 7-மணி முதல் 10மணி வரை. மாலை 3 „ 7 „

இழந்த பலத்தைத் திரும்பக் கொடுக்கக்கூடியது

பழனி R. M. K தங்க மாத்திரை

தாது புஷ்டிக்கு இதற்கு நிகரான மருந்து ஒன்றுமே யில்லை. தாதைக்கட்டி, பலஹீனத்தைப் போக்கி, நரம்புகளுக்கு பலத்தைக் கொடுத்து உங்கள் மனக் கவலையை நீக்கி, தம்பதிகளை மகிழ்விக்கச் செய்யும். லாகிரி சேராதது இதை சகலரும் சாப்பிடலாம். விந்தில் கருவமைக்கும் சக்தியுள்ளது.

100 வேளை தங்க மாத்திரை, மஹா மன்மத காம கேசரி ரூ. 10

50 வேளை தங்க மாத்திரை, அல்வா ரூ. 5. (கியாட்லாக் இனம்.)

F. M. S. & S. S. வாசிகள் ரூ. 2. கூட்டி முன் பணம் அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர், **ஆர். எம். கே. வேலுசாமி,**

சித்த வைத்தியசாலை, (ஸ்தாபிதம் 1900) பழனி.

பிராஞ்சுகள்:—16, (மேல்மாடி). திருவல்லிக்கேணி ஹைரோடு சென்னை. 68, செட்டியார் தெரு. கொழும்பு.

சங்கநாதம்

குண்டு, பீரங்கி எம்மாத்திரம்?

வாயில்லாப் பூச்சி! - - பூர்வ ஞானம்!

பித்தம் தெளிந்தது!

"ஸ்ட்ராங் டோஸ்"!

அடிமைப்பட்ட நாடுகளுக்கு, அதிலும், ஆயுத பலமற்று நிர்க்கதியாக இருக்கும் தேசங்களுக்கு, காந்திஜியின் சாத்விகப் போராட்டத்தைத் தவிர, வேறு சரியான ஆயுதம் கிடையாது; வெடிகுண்டு, பீரங்கி, டாங்கிகளெல்லாம் சாத்விகப் போராட்டத்துக்கு முன் எம்மாத்திரம்? சாத்வீக எதிர்ப்பு, எந்த சர்க்காரையும் நடுங்க வைத்துவிடும். அதற்கு இந்தியாவில் இன்று நடைபெறும் போராட்டமே சரியான சான்று. இந்தியாவில் பிரிட்டிஷ் ஆதிக்கம் ஏற்பட்ட காலமுதலே, இந்தியர் சுதந்திரத்துக்காகக் கிளர்ச்சி செய்து வந்தார்கள்; 1857ம் வருடம் பலாத்காரப் புரட்சி ஏற்பட்டது. இதைத்தான் "சிப்பாய்க் கலகம் என்று சர்க்கார் அதற்குத் திருநாமமிட்டிருக்கிறார்கள்! சிப்பாய்க் கலகமும் ஒரு சுதந்திரப் போராட்டந்தான்; ஆனால், அது பலாத்காரப் போராட்டம்; அதைச் சர்க்கார் அப்பொழுதே நசுக்கிவிட்டார்கள். பலாத்காரம் பயன்படாது போயிற்று; பலாத்காரம் பயனற்றதென்பது தெளிவாகிவிட்டது. பலாத்காரப் புரட்சி செய்ததால், அதன்பின் சுமார் 50, 60 வருடங்களுக்கு இந்தியர் எந்தவிதமான கிளர்ச்சி செய்யவும் துணியவில்லை. கிளர்ச்சி செய்யத் தலைவர்களும் வரவில்லை. பலாத்காரத்தைக்கைக்கொண்டதால், மீண்டும் அவ்வித கிளர்ச்சி நடைபெறுமலிருக்கச் சர்க்கார் கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள். இந்தியர், தலைவரின்றி, புரட்சியின்றி, கிளர்ச்சியின்றி, வாயில்லாப் பூச்சிகளாகவே இருந்து வந்தார்கள்! அதன்பின் மிதவாதிகள் தோன்றினார்கள்; அவர்களுக்குப் புரட்சி, கிளர்ச்சி, போராட்டம் என்றால் அறவே கூடாது! அதில் நம்பிக்கையும் கிடையாது. சுதந்திரம் பெற அவர்கள் அறிந்த ஒரே மார்க்கம் விண்ணப்பம்! மண்டி போட்டு மனுச் செய்து கொள்ளுவதுதான் இந்திய சுதந்திரத்துக்கு வழியென்று நினைத்தார்கள். ஆகவே 1885ம் வருட முதல், 1907ம் வருடம் வரையில் ஓயாமல், ஒழியாமல் மனுச் செய்து கொண்டேயிருந்தார்கள்! விண்ணப்பங்கள் லண்டனில் போய் குவிந்தன! அந்த விண்ணப்பங்களைக் கவனித்தது யார்? சில விண்ணப்பங்களைச் செல்லரித்தன; பல குப்பைத்தொட்டிகளில் போய் நிறைந்தன. ஆனால், இந்தியர் சுதந்திர விண்ணப்பத்தை ஏறெடுத்துப் பார்த்த பிரிட்டிஷ் மந்திரி கிடையாது!

அந்தக் காலத்தில்தான் தாதாபாய் நௌரோஜி, திலகர் பிரான் போன்ற தீவிரவாதிகள் தோன்றினார்கள். விண்ணப்பங்களையும், மனுக்களையும் அவர்கள் விரும்பவில்லை. கிளர்ச்சி வேண்டுமென்றார்கள். 1920ம் வருடம் காந்திஜி கைக்குக் காங்கிரஸ் வந்தபின்தான் சுதந்திரம் போராட்டம் ஆரம்பமானது. சாத்விகச் சட்ட மறுப்பு, ஒத்துழையாமை, வரி கொடாமை போன்ற போராட்டங்களைக் காந்திஜி ஆரம்பித்தார். நாட்டில் ஒரு புது உணர்ச்சி ஏற்பட்டது. 50, 60 வருடங்களில் செய்து முடிக்க முடியாத அவ்வளவு பெரிய வேலைகளை, காந்திஜி சில வருடங்களில் செய்து முடித்தார். நாட்டில் ஒரு புதிய உற்சாகத்தையும், ஊக்கத்தையும், உணர்ச்சியையும் உண்டுபண்ணினார். தேசத்துக்காகத் தியாகஞ் செய்யவேண்டும்; தியாக மின்றேல் சுதந்திரமில்லை என்ற உண்மையை மக்கள் அறிந்தார்கள். எனவே, 1920ம் வருடத்தில் காந்திஜி ஆரம்பித்த போராட்டத்தில் சுமார் 30,000 பேர் சிறை சென்றனர். அதன்பின் ஆரம்பித்த 1930ம் வருடப் போராட்டத்தில் சுமார் 60,000 பேர் சிறை சென்றனர். 1932ம் வருடம் ஆரம்பித்தபோராட்டத்தில் சுமார் 1,20,000 பேர் சிறை புகுந்தனர்! இன்று நடக்கும் சாத்விகப் போராட்டத்தில் சுமார் 50, 60 ஆயிரம் பேர் சிறை சென்றிருக்கலாம். முழுக் கணக்கு விபரமும் கிடைக்கவில்லை. ஆனால், பல ஆயிரக்கணக்கான மக்கள் சிறை சென்றார்களென்பதில் சந்தேகமில்லை.

*   *   *   *

இன்று நடக்கும் போராட்டம் தனிப்பட்டவர்கள் போராட்டம்; இந்தப் போராட்டம் சர்வ ஜனப் போராட்டமாக இருந்திருக்குமேயானால், பல லக்ஷக்கணக்கான மக்கள் சிறை சென்றிருப்பார்களென்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், இதற்கு முன்னிருந்த உணர்ச்சி, ஊக்கம், உற்சாகத்தைவிட, மக்களிடம் அதிக உணர்ச்சியும், உற்சாகமும் ஏற்பட்டிருப்பது கண் கூடு. இந்தப் போராட்டத்தில், பிரிட்டிஷாருக்கு எவ்வித இடையூறும் ஏற்படக் கூடாதென்பதை உணர்ந்து, காந்திஜி போராட்டத்தை மட்டுப்படுத்தியிருக்கிறார். இன்றேல், இந்தப் போராட்டத்துக்கு நாடு எங்கும் நிறைய ஆதரவு இருந்திருக்கும்; இந்திய சிறைகளில் லக்ஷக்கணக்கானவர்கள் அடைபட்டிருப்பார்கள். இந்தியாவிலுள்ள சிறைகளில் இடமில்லாமலே போயிருக்கலாம். அவ்வித நிலைமைக்குக் காந்திஜி இப் போராட்டத்தைத் திருப்பவில்லை. அதுவும் நன்மைக்கு என்று தான் சொல்ல வேண்டும். இன்றேல், இந்தியா இன்று என்ன நிலைமையிலிருந்திருக்குமோ யார் கண்டது? இந்திய மக்கள் என்ன கதி யடைந்திருப்பார்களோ, யாரால் சொல்ல முடியும்?

*   *   *   *

காந்திஜி இந்தப் போராட்டத்தைத் தீவிரமாக நடக்காததால், மூர்த்தி போன்ற அண்ணைத்தைகள் அதிருப்தி யடைந்தனர்! சத்தியாக்கிரக போராட்டம் வெற்றி பெறவில்லையென்றுகூடக் கூறத் துணிந்துவிட்டனர். இந்திய சட்டசபையிலுள்ள காங்கிரஸ் கட்சியினர், அவர்கள் சட்டசபை பதவிகளைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்காக 4ந்தேதி இந்திய சட்ட சபைக்குப் போனார்கள்; ஆசனங்களில் உட்கார்ந்தார்கள்; பேசாமல் எழுந்து வந்தார்கள்! ஆனால், அந்த காங்கிரஸ் கட்சிக் கூட்டம், டில்லியில் அடிக்கடி கூடியது. கூட்டத்தில் மூர்த்தி வகையறாக்கள், சத்தியாக்கிரகப் போராட்டம் தோல்வியடைந்து விட்டதென்றே அபிப்ராயப்பட்டார்களாம்! கே. சந்தானம், அப்துல் கய்யூம் போன்றவர்கள், அந்தக் கூற்றை மறுத்தனர்; இந்திய சட்ட சபையிலிருக்கும் அங்கத்தினர் பலர், இந்திய காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்; சத்யாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பிக்கவேண்டுமென்று பம்பாய்க் கூட்டத்தில் தீர்மானம் வந்தபோது, அவர்கள் எல்லோருமே சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆதரித்தனர். இன்று அதே அங்கத்தினர்கள் சத்தியாக்கிரகப் போராட்டத்தை எப்படிக் கண்டிக்கத் துணிந்தார்கள்? பதவி ஆசையைத் தவிர இதற்கு வேறு என்ன காரணம் இருக்க முடியும்? அந்தக் கூட்டத்துக்கு ராஜகோபாலாச்சாரியாரும் போயிருந்தார். அவர் வாதத்தில் கலந்துகொள்ளவில்லை. ஆனால், அவர்கள் பேசியதைக் கவனித்துக் கொண்டிருந்தார். அவர்கள் பேசியதை எதிர்க்காமல், சில கேள்விகள் மட்டும் போட்டார். "சத்தியாக்கிரகத்தில் நம்பிக்கை இருக்கிறதென்று சொல்லிக்கொண்டே, பதவிகளுக்குத் திரும்ப வேண்டுமென்று கூறுவது முரணை, இல்லையா? சர்வ தேச நிலைமை, இந்தியாவின் அரசியல் நிலைமை, சர்க்கார் மனமாற்றமில்லாமை முதலியவைகளை யெல்லாம் கவனிக்கும் போது, காங்கிரஸ் கொள்கையை மாற்றும்படி கேட்பது நியாயமா? இப்படியெல்லாம் கேட்பதால் நான் என் அபிப்ராயத்தைத் தெரிவிப்பதாக யாரும் நினைத்துவிட வேண்டாம்" என்று ஆச்சாரியார் சொன்னார்! ஆச்சாரியார் இவ்வளவு கேள்விகள் கேட்டபின்தான், அசெம்பிளி மெம்பர்களுக்கு ஓரளவு பூர்வ ஞானம்; என்றாலும், ஆச்சாரியார் ஆதரவைப் பெற்று, இந்திய சட்டசபையில் பட்ஜட்விவாதம் வரும்போது, சட்டசபைக்குப் போக அனுமதி பெற அங்கத்தினர்கள் முயற்சிக்கின்றனர். ஆச்சாரியார் அவர்களுக்கு நேரடியான பதில் கொடுக்கவில்லை; அவர்களின் அபிப்ராயங்களைக் காந்திஜியிடம் தெரிவிக்க அவர் ஒப்புக்கொண்டார்; புலாபாய் தேசாயும், காந்திஜியைக் கண்டு, அசெம்பிளி அங்கத்தினர்களின் அபிப்ராயத்தைத் தெரிவித்துக் கொள்ளுவார் இந்தியச் சட்ட சபையில் பட்ஜட் விவாதம்வரும்போது, அசெம்பிளிக்குக் காங்கிரஸ் அங்கத்தினர்களைக் காந்திஜி ஒரு வேளை அனுமதிக்கலாம். ஆனால், அதற்குள் என்ன மாற்றங்கள் ஏற்படப் போகின்றனவோ தெரியவில்லை.

*   *   *   *

டில்லியில் இருந்தகாலத்தில் ராஜகோபாலாச்சாரியாரை, வைசிராய் நிர்வாக சபை அங்கத்தினர்கள் கண்டு பேசினார்கள்; எம். எஸ். ஆனே, சர். அக்பர் ஹைதரி, என். ஆர். சர்க்கார் முதலியோர் அவரைக் கண்டு, அரசியல் நெருக்கடியையும், சர்க்கார் உத்தேசத்தையும் பற்றிக் கலந்து பேசி

(அடுத்த பக்கம் பார்க்க)



வில்சன் தங்கம்

ஒரு தோலா ரூ. 2. ஐந்து தோலா ரூ. 9.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களில் லக்ஷக்கணக்கான மக்கள் இதை இமிடேஷன் தங்கங்களிலேயே சிறந்ததெனக் கூறுகிறார்கள்: சவரன் தங்கத்திற்கு நிகரான ஆபரணங்கள். உத்திரவாதமான மெருகுள்ளது. ஒரு தரம் வாங்கினால் நம்பிக்கையுண்டாகும். முக்கியமான நகரங்களில் ஏஜண்டுகள்தேவை. நிபந்தனைகளுக்கு எழுதவும். வேலையற்றவர்களுக்கு ஒரு அரிய சந்தர்ப்பம். ஆங்கிலத்தில் எழுதவும்.

வளையல்கள் ஜோடி 1-க்கு ரூ. 2-12-0
கைகடிகாரச் செயின் 1-க்கு ரூ. 3- 8 -0
கழுத்துச் சங்கிலி 1-க்கு ரூ. 5- 8 -0

வில்ஸன் கோல்ட் கம்பெனி

பெங்களூர் ஸிடி. (T. M.)

தலைமை ஆபீஸ்:- 331, சிக்பேட் பிராஞ்சு:- 398, சிக்பேட்.

ணுகளென்று தெரிகிறது; ஆச்சாரியார் காங்கிரஸ் கொள்கையைக் கொஞ்சமேனும் விட்டுக்கொடுக்கவில்லை. ஆனால் வைசிராய் நிர்வாக சபையின் கருத்து என்ன வென்பதை அறிந்துகொண்டார். வைசிராய் நிர்வாக சபையில் புதிதாகச் சேர்ந்திருக்கும் மெம்பர்களாலெபெரிய காரியங்களைச் சாதிக்க முடியாது போனலும், அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் ஒரு விஷயத்திலாவது, சர்க்காரை வற்புறுத்தி வழிக்குக் கொண்டுவந்துவிடலாமென்று நினைத்தார்கள்! அதுகூட இதுவரையில் பலனளிக்கவில்லை. டில்லியில் உண்ணாவிரதமிருக்கும் சுமார் 225 காவற் கைதிகள் சம்பந்தமாக இந்திய ஹோம் மெம்பர், சர். ரெஜினல்ட் மாக்ஸ்வெல் கூறிய நிர்மானமான பதில், புதிய மெம்பர்களின் எண்ணத்தில் மண்ணைப் போட்டிருக்குமென்பதில் சந்தேகமில்லை! என்னுலும், இந்திய மெம்பர்கள் மெஜாரிட்டியாக இருப்பதால், அவர்கள், வெள்ளை மெம்பர்களை ஒருவாறு வழிக்குக் கொண்டுவரலாமென்று நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.

* * * *

அரசியல் கைதிகளை யெல்லாம் விடுதலை செய்துவிட வேண்டுமென்பதுதான் அவர்கள் எண்ணம். முக்கியமாகத் தேசியக் காங்கிரஸ் தலைவர் மௌலானா அபுல் கலாம் அஸாத், பண்டித ஜவஹர்லால் நேரு முதலிய முக்கியமான தலைவர்களை விடுதலை செய்யச் சர்க்கார் ஒப்புக்கொள்ளக் கூடுமென்று தெரிகிறது. இது சம்பந்தமாக அடுத்த வாரம் சர். மாக்ஸ்வெல் இந்திய சட்டசபையில் சர்க்காரின் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கக்கூடும். முக்கியமான காங்கிரஸ் தலைவர்களை விடுதலைசெய்யச் சர்க்கார் சம்மதிக்கலாமென்ற நம்பிக்கை இருந்துவருகிறது. தலைவர்களை விடுதலைசெய்தபின், காங்கிரஸ் வழிக்கு வருகிறதா, இல்லையாவென்பதை அறிய இந்திய சர்க்காரும் உத்தேசித்திருக்கிறார்களாம்!

காங்கிரஸ் கொள்கை மாறுது என்பதை விளக்கி, காந்திஜி அறிக்கை வெளியிட்ட பின்தான் அநேக காங்கிரஸ்காரரின் மதி மயக்கம் தெளிந்தது! சத்தியமூர்த்தி ஐயர் போன்றவர்களின் சட்ட சபைப் பிரவேசப் பித்தமும் தெளிந்தது. சர்க்காருக்கும் கொஞ்சம் புத்தி வந்தது! காங்கிரஸ் இயக்கம் நின்றுவிடும்; காங்கிரசை ஒடுக்கிவிடலாமென்று சர்க்கார் கொண்டிருந்த அந்தரங்க எண்ணமும் அடிபட்டது. காந்திஜியின் அறிக்கை, வெள்ளைப் பத்திரிகைகளுக்கும், பிரிட்டிஷ் மந்திரிகளுக்கும் வாட்ட சாட்டமாக இருந்தது போலும்! ஒரு "ஸ்டாராங் டோஸ்" எடுத்துக்கொண்டவரைப்போல், சர்க்காரும் கொஞ்சம் சிந்திக்க ஆரம்பித்திருக்கிறார்கள்! சர்க்கார் உடனே வழிக்கு வராதுபோனலும், சீக்கிரத்தில் ஒரு வழிக்கு வரக்கூடுமென்ற நம்பிக்கை இருந்துவருகிறது.

* * * *

சர்க்கார் சாப்பிட்ட "டோஸ்" லீகர் வயிற்றைக் கலக்கியிருக்கிறது. லீக் தலைவர் ஜின்னு சாஹேப் முன்னிலும் அதிகமாகப் பாகிஸ்

சங்கநாதம் : (முன் பக்கத் தொடர்ச்சி)

வாய் புளிக்குமா? :-: சார மற்ற சக்கை!
சாணக்கிய தந்திரம்! — குதர்க்க வாதம்!
ரகசிய முணு முணுப்பு!

தான் வேண்டுமெனக் கொக்கரிக்கிறார்! அவர் முஸ்லிம் கலாசாலை மாணவர்கள் கூட்டத்தில் பேசிய போது, முஸ்லிம் இந்தியா, ஹிந்து இந்தியா என்று பிரிவினை செய்து பேசத் துணிந்தார்! முஸ்லிம் இந்தியா, அதன் சொந்த சாஸனத்தைத் தயாரித்துவிட்டது! ஆகவே, பாகிஸ்தான் வந்தே தீரும். பாகிஸ்தான் வந்தால் ஹிந்துக்களைவிடப் பிரிட்டிஷாருக்குத்தான் ஆபத்து அதிகமென்ற பீதியை கிளப்பி விடுகிறார்கள்; இது வெறும் அசட்டுத்தனம் என்று ஜின்னு சாஹேப் சொன்னார். பாகிஸ்தான் வந்தே தீரும்; இந்தியாவைக் கண்ட துண்டமாக்கிப் பிளந்தே தீருவோம் என்று ஜின்னு சொல்லி விடுவதால் பாகிஸ்தான் வந்து விடுமா? மாங்காய் என்றால் வாய் புளிக்குமா? பாகிஸ்தானே, முஸ்லிம் இந்தியாவோ ஏற்பட, ஹிந்துக்களோ மற்றவர்களோ பார்த்துக் கொண்டு இருப்பார்களா? அவர்கள் உயிருள்ள வரையில் எதிர்க்காமலிருந்து விடமாட்டார்கள்! காந்திஜி சொன்னது போல், "தேசத்தை இரண்டு துண்டாக வெட்டு முன், என்னை இருகூருக வெட்டித் துண்டு போடட்டும்!" அதேபோல் இந்தியர் சொல்லமாட்டார்களா? சீக்கியரும், மற்றவர்களும் கடைசித் துளி இரத்தம் சிந்தும் வரையில், பாகிஸ்தானை எதிர்க்காமலா இருப்பார்கள்? இதையெல்லாம் அறிந்தே ஜின்னு, காந்திஜி தலைமீது பழி போடப் பார்க்கிறார்!

* * * *

சத்தியாக்கிரகப் போராட்டத்தைத் தீவிரமாக நடத்தினல், உள்நாட்டுக் கலகம் ஏற்படலாமென்று காந்தி சொன்னதை, ஜின்னு அவருக்குச் சாதகமாகத் திரித்துக் கொண்டார்! தென்னை மரத்தில் தேள் கொட்டக் குட்டிச் சுவரில் நெறி கட்டியதுபோல், காந்திஜி ஒரு சத்தமான கருத்துடன் சொன்னது, ஜின்னுவின் பாகிஸ்தான் திட்டத்தைப் போய்த் தாக்கி இருக்கிறது. உள்நாட்டுக் கலகம் ஏற்படுமேயானல், அந்தக் கலகத்துக்குக் காங்கிரஸ்தான் காரணமாகும் என்று ஜின்னு சொல்லுகிறார். அவர் பாகிஸ்தான் ஏற்படுத்த ஒரு உள்நாட்டுக் கலவரத்தை உண்டுபண்ண இப்பொழுதே அடி கோலுகிறார் போலும்! நெல்லூர், டாக்கா கலகங்கள் இதற்கு முதல் அறிகுறி! உள் நாட்டுக் கலகம் வந்தால், அதற்குக் காங்கிரஸ்தான் காரணமாக இருக்கக்கூடு மென்று சொல்லுகிறார். முஸ்லிம்கள் இந்தியாவில் கால் பங்கு கேட்கிறார்கள்; காங்கிரஸ்காரரோ இந்தியாவின் முழுப் பங்கும் கேட்கிறார்கள். முஸ்லிம் இந்தியாமீது அதிகாரம் செலுத்தும் எண்ணமும் காங்கிரஸ்காரருக்கு இருக்கிறதென்று சொல்லுகிறார். இது வெறும் அண்டப் புளுகு! காங்கிரஸுக்கு அந்த நோக்கம் கிடையாது. இந்தியாவுக்கு சுதந்திரம்வேண்டும்; இந்தியா பிளவுபடக் கூடாது. சுதந்திர இந்தியாவில் ஒரு முஸ்லிம் பிரதம மந்திரியாக இருந்தால்கூட, காங்கிரஸ் அதைப் பொருட்படுத்தாது. எல்லா சமூகங்களும் ஒன்றுபட்டு, எல்லா சமூகங்களுக்கும் சம உரிமை இருக்கவேண்டுமென்பதே காங்கிரஸ் கோரிக்கை. இதைத் தவிர, காங்கிரஸே அதிகாரஞ் செலுத்தவேண்டுமென்ற எண்ணம் காங்கிரஸுக்குக் கடுகளவும் கிடையாது. இதைக் காங்கிரஸும், காந்திஜியும் பன்முறை தெளிவுபடுத்தியிருப்பதை மறந்திருக்க முடியாது.

* * * *

ஜின்னு இத்துடன் விட்டாரா? இல்லை; சர்க்கார்மீதும் ஒரு பெரிய பழியைப் போட்டார்! சர்க்கார், லீகிக்கு இணங்கிவர வில்லையாம்! அதனுல்தான் லீகர் இந்திய சட்ட சபையைப் பகிஷ்கரிக்க நேர்ந்ததென்று சொல்லுகிறார். இது சார மற்ற சக்கைப் பேச்சு. சர்க்கார்மீது குறை சொல்லும் ஜின்னு சாஹேப், அவருடைய சாணக்கிய தந்திரங்களை ஏன் பகிரங்கமாகக் கூறக் கூடாது? ஒரு முக்கியமான பிரிட்டிஷ் பார்லிமெண்ட் அங்கத்தினருக்கு ஜின்னு, ஒரு ரகசிய கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தில் அவர் எழுதியிருக்கும் விஷயங்களைக் கவனித்தால், அது முதல்தரமான "தேசத் துரோகம் என்றே சொல்லலாம். இந்தியா ஜனநாயகத்துக்கே லாயக்கில்லையாம்! அரசியல், மதம், கலாச்சாரம் முதலியவைகளில் முற்றிலும் மாறுபட்ட இரு பெரும் சமூகங்கள் இந்தியாவில் இருப்பதால்தான் இந்தியா, ஜனநாயக ஆட்சிக்கு லாயக்கில்லையென்பது ஜின்னுவின் குதர்க்க வாதம்! பிரிட்டனும், இந்தியாவிலுள்ள சமஸ்தானங்களும், லீகும் ஒன்றுபட்டுவிட்டால், காங்கிரஸைத் தூரத் தள்ளிவிடலாம்; பிரிட்டிஷார் எந்த ஒத்துழைப்புக்குத் துடித்துக் கொண்டிருக்கிறார்களோ, அந்த ஒத்துழைப்புக் கொடுப்பதாக ஜின்னு சொல்லுகிறார்! அவர் சும்மா சொல்லவில்லையாம்! இந்தியாவிலுள்ள முஸ்லிம்களில் 100க்கு 90 சதம் விகிதமுள்ள முஸ்லிம்கள் சார்பாகவே சொல்லுகிறாராம்! பிரிட்டிஷ் காமன்வெல்த்திலிருந்து விலகும் நோக்கமே லீகருக்குக் கிடையாது; ஆனால், காங்கிரஸ்காரரின் பிரசார வேகத்தில் மட்டும், பிரிட்டிஷார் சிக்கிக்கொள்ளக் கூடாது என்று ஜின்னு சாஹேப் பிரிட்டிஷாரை எச்சரித்திருக்கிறார்! இந்திய வைசிராய் லார்டு லின்லித்கோ மீதும் ஜின்னுவுக்கு வெறுப்புத் தட்டியிருக்கிறது! வைசிராயை முதுகுக்குப் பின்னலிருந்து குத்த முயற்சித்திருக்கிறார்! இந்திய அரசியல் நிலைமையைப் பிரிட்டிஷார் நன்கு தெரிந்து கொள்ளவில்லை. இதற்குக் காரணம் வைசிராய்தான்! அவர் உண்மை நிலைமையைப் பிரிட்டிஷாருக்கு அறிவிக்காமலிருக்கிறார். ஆகவே, அவருடைய உத்தியோக காலத்தை அதிகரிக்கக் கூடாது என்றும் பிரிட்டிஷாருக்கு யோசனை சொல்லி இருக்கிறார்! இதிலிருந்து ஜின்னுவின் மோசமான சூழ்ச்சிகளை அறிந்துகொள்ளலாம்! கேவலமான சூழ்ச்சிகளிலும், உண்மைக்குமாறான படு பொய்களையும் சொல்லி, இந்தியாவின் சுதந்திரத்துக்கு முட்டுக்கட்டை போடவேண்டுமென்பதே ஜின்னுவின் அந்தரங்க நோக்கம்! பிரிட்டிஷார் காங்கிரஸ்காரருக்கு அதிகாரம் கொடுக்கக் கூடாதென்பதுதான் அவர் கவலை! மகன் இறந்தாலும் பாதகமில்லை; மருமகள் தாலி யறுக்கவேண்டும்! இந்தியாவுக்கு சுதந்திரம் வராதுபோனலும் போகட்டும்; அதிகாரம் மட்டும் காங்கிரஸ்காரர் கைக்குப் போய்விடக் கூடாது! எல்லா அதிகாரங்களும் முஸ்லிம்கள் கைக்கே வரவேண்டும்! இதைவிட மோசமான, இழிவான எண்ணம் வேறு யாருக்காவது ஏற்படுமா? ஜின்னுவைப் போன்றவர்களுக்கும், சு. ம. ஜஸ்டிஸ் கட்சித் தலைவர், ராமசாமி நாயக்கர் போன்றவர்களுக்குந்தான் இவ்வித அற்பத்தனமான துரோக எண்ணம் ஏற்படக்கூடும்!

* * * *

இந்திய முஸ்லிம்களில் 100க்கு 90 வீதம் ஜின்னுவை ஆதரிப்பதாக ஜின்னு, லண்டனுக்கு எழுதியிருக்கிறார்! ஆனல், இந்திய முஸ்லிம்களில் 100 க்கு 10 பேர்களாவது ஜின்னுவை ஆதரிக்கத் தயாராக இருக்கிறார்களா வென்பதே சந்தேகந்தான்! லீக் நிர்வாகக் கமிட்டியிலுள்ள பலர் ஜின்னுவை ஆதரிக்கவில்லை. அவர் எதேச்சாதிகாரத்தையும், அவருடைய பாகிஸ்தான் திட்டத்தையும் எதிர்த்து வருகிறார்கள். பாஞ்சால முதன் மந்திரி, சர். சிக்கந்தர் ஹாயத்கான் பாகிஸ்தானை எதிர்க்கிறார். வங்க முதன் மந்திரி பஸ்லுல் ஹக் ஜின்னுவின் எதேச்சாதிகாரப் போக்கை வெறுக்கிறார்! வெளிமாகாணத்திலுள்ள ஒரு முஸ்லிம், வங்க முஸ்லிம்கள்மீது அதிகாரஞ்செலுத்த ஒருபொதும் அனுமதிக்க முடியாது என்று சொல்லவில்லையா? இதே போல் எத்தனையோ முஸ்லிம் தலைவர்கள் ஜின்னுவின் தலைமைப் பதவியை எதிர்த்துவருகிறார்கள். பகிரங்கமாக எதிர்க்கத் தைரியமில்லாதவர்கள் முணு முணுத்துக் கொண்டிருக்கிறார்கள்! பஸ்லுல் ஹக் தைரியமாக ஜின்னுவையும், லீகையும் எதிர்த்தார்; புகார் சொன்னார். அந்தப் புகார்களை வாபஸ் வாங்க மறுத்துவிட்டார். லீகிலிருந்து ராஜினாமா செய்தார்; அந்த ராஜினாமாவையும் வாபஸ்பெற மறுத்து வருகிறார். அவர் தற்போது டில்லியிலிருக்கிறார். லீக் தலைவர்களைக் கண்டு பேசினார்; ஜின்னுவையும்கண்டுபேசக் கூடும். ஆனல், அவர் லீக் தலைவர் மீதும், நிர்வாக சபையினர்மீதும் கூறிய புகார்களை வாபஸ் வாங்கி ஜின்னுவிடம் சரணகதியடைவாரா வென்பதைப் பொறுத்துப் பார்க்க வேண்டும்!

மணிவேலன்
அல்லது
ஏழைகளின் தோழன்
ஓர் இனிய நாவல் விலை ரூ. 1-8-0
"தமிழ் மணி", மதராஸ்.

தமிழ் மணி

சென்னை—விஷுஹு ஐப்பசிமூ 24உ (9—11—41)

ஆண்டு ஏழு

“தமிழ் மணி”க்கு ஆறு ஆண்டுகள் பூர்த்தியாகி, இவ்வாரம் ஏழாம் ஆண்டு ஆரம்பித்திருக்கிறது; “தமிழ் மணி”யின் வளர்ச்சிக்கும், செல்வாக்கிற்கும் தமிழ் அன்பர்களின் ஆதரவே முக்கிய காரணம். அதன் அபிவிருத்தியைக் கண்டு தமிழர் ஆனந்திப்பார்களென்பது திண்ணம். “தமிழ் மணி”யில் இன்னம் பல அபிவிருத்திகள் செய்ய எண்ணியிருந்தோம்; ஆனல், பாழும் யுத்தம் குறுக்கே வந்தது; காகிதப் பஞ்சத்தால் பக்கங்களைக் குறைக்கவேண்டியதாயிற்று என்றாலும், தமிழர், “தமிழ் மணி” மீதுள்ள அபிமானத்தால், பக்கங்களை எண்ணிப் பார்க்காமல் அதிலடங்கிய விஷயங்களையே பெரிதாக எண்ணி, வாங்கிப் படித்துப் பயன் பெற்று வருவதைக் கண்டு சந்தோஷிக்கிறோம்.

ஆறு வருடங்களாகத் “தமிழ் மணி” அதன் கொள்கையில் உறுதியுடனிருந்து வந்திருக்கிறது. தயவு தாட்சண்யமின்றி, உள்ளதை உள்ளவாறு எடுத்துக் கூறுவதையே அதன் கடமையாகக் கொண்டிருக்கிறது. இனிமேலும் “தமிழ் மணி” அதன் கொள்கையில் உறுதியுடன் நின்று, நேர்மையான வழியில் உழைத்துவரும். தாய் நாட்டிற்கும், சிறப்பாக தமிழ் நாட்டிற்கும், தமிழருக்கும், தமிழுக்கும் அது சேவை செய்தே தீரும். அதன் கடமையிலிருந்து அணுவளவும் நழுவப் போவதில்லை.

“தமிழ் மணி”யை அன்புடன் ஆதரித்து வந்த தமிழ் அன்பர் அனைவருக்கும் எமது நன்றி. இதுவரையில் அவர்கள் “தமிழ் மணி”யை எவ்வளவு ஆர்வத்துடன் ஆதரித்து வந்தார்களோ, அதேபோல் இனிமேலும், ஆதரித்து வரும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். அதன் வளர்ச்சி, நண்பர்களின் ஆதரவையே பொறுத்திருக்கிறதென்பதை மீண்டும் ஞாபகமூட்டுகிறோம். “தமிழ் மணி”யின் ஏழாவது ஆண்டில் அதை, மனமுவந்து வரவேற்று, ஆசீர்வதித்து, ஆதரிக்குமாறு மீண்டும் தமிழ் மக்கள் எல்லோரையும் கேட்டுக்கொள்ளுகிறோம். தமிழ் மக்கள் அனைவரின் ஆதரவு “தமிழ் மணி”க்கு உண்டு; எக்காலமும் உண்டு என்ற திடசித்தம் நமக்குண்டு. ஆண்டவன் அருள்புரிவானாக.

★

ஒப்பந்தமா, உயிலா?

பர்மா-இந்திய ஒப்பந்தம், ஒரு ஒப்பந்தம் அல்ல; இரு நாடுகளின் உரிமைகளைப் பாதுகாப்பதே ஒப்பந்தம். ஒரு நாட்டின் உரிமையை, மற்றொரு நாட்டிற்கு எழுதிக் கொடுக்கும் உயில் போன்றது இந்தப் பர்மா - இந்திய ஒப்பந்தம்! பர்மாவில் குடியேறும் இந்தியர், அவர்கள் உரிமைகளை உயில் எழுதிக் கொடுத்து விட்டுத் திரும்ப வேண்டியதுதான்! அந்த லக்ஷணத்தில் பர்மா-இந்திய ஒப்பந்தம் இருக்கிறது. இந்த ஒப்பந்தத்துக்குக் காரண கர்த்தவாக இருந்தவர் சர். வாஜ் பேயர். அவர் அமெரிக்காவுக்குப் போய்விட்டார்; அவர் செய்த ஒப்பந்தம் சீரழிகிறது! பர்மாவுடன் ஒரு ஒப்பந்தஞ் செய்துகொண்டு வரும்படி, சர்க்கார் அவரைப் பர்மாவுக்கு அனுப்பவில்லை. பர்மா-இந்தியரின் நிலைமையை ஆராய்ந்து வரவே அனுப்பினார்கள். ஆனல், சர். வாஜ் பேயரோ, பர்மாவுடன் ஒரு ஒப்பந்தஞ் செய்துகொண்டு திரும்பினார். அந்த ஒப்பந்தத்தை யாவது சரியான வழியில் செய்து கொண்டு வந்தாரா? இல்லை; இந்தியரின் உரிமைகளெல்லாம் பர்மியருக்கு உயில் எழுதிக் கொடுத்து விட்டு வந்தார்! பர்மா சர்க்கார்கூட, இந்தியர்மீது இவ்வளவு ஆபாசமான நிபந்தனைகளை விதிக்கத் துணியமாட்டார்கள். அவ்வளவு ஆபாசமான நிபந்தனைகளை சர். வாஜ்பேயர் ஏற்றுக்கொண்டு, ஒப்பந்தத்தைப் பூர்த்தி செய்திருக்கிறார்!

எதிர்ப்பு !

பர்மா-இந்திய ஒப்பந்த சம்பந்தமாக இந்திய சட்டசபையில் ஒரு தீர்மானம் நிறைவேறியிருக்கிறது. “பர்மாவிலுள்ள இந்தியர் சுதந்திரத்தைப் பற்றிப் பார்லிமெண்டில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளுக்கிணங்க, பூர்ண திருத்தங்களுக்கு இசையாவிடில், அல்லது, இந்திய மக்களுக்கு அவமானமான ஷரத்துக்களைப் போக்காவிடில், இந்த ஒப்பந்தத்தை இந்திய மந்திரி கவுன்சில் உத்திரவு மூலம் அங்கீகரிக்கக்கூடாது”. இதுவே இந்திய சட்டசபையில் நிறைவேறிய தீர்மானத்தின் கருத்து. இந்தத் தீர்மானத்தைச் சில வெள்ளையரைத் தவிர எல்லோரும் ஆதரித்தார்கள். சர்க்கார்கூட இதற்கு ஆதரவு காட்டினார்கள். சர்க்காரின் ஆதரவைப் பெறுவதற்கு எம். எஸ். ஆனேதான் காரணமாக இருந்திருக்கக்கூடும். சர்க்காரின் ஆதரவில் இத் தீர்மானம் நிறைவேறியதற்காகச் சர்க்காரை பாராட்டுகிறோம். ஆனல், சில வெள்ளையர் இத் தீர்மானத்தை எதிர்த்ததைக் கண்டு இந்தியர் ஆத்திரங்கொள்ளாமலிருக்க முடியாது. வெள்ளையருக்கு எந்த தேசத்திலும் சகல உரிமைகளுமுண்டு. எந்தத் தேசத்துக்கும் அவர்கள் தாராளமாக போகலாம்; அவர்கள் தேவலோக பிறவிகள்! இந்தியர், பொதுவாக கருப்பர், சண்டாளர்! அவர்கள் எங்கும் போக முடியாது; போனலும், அடிமை என்ற முத்திரை போட்டுக்கொண்டுதான் போகமுடியும்! இந்த நிலைமையில், வெள்ளையர் இத் தீர்மானத்தை எதிர்த்ததில் ஆச்சரியமொன்றுமில்லை! வெள்ளையருக்கும் இவ்வித தடைகள் இருந்தால், அப்பொழுது அவர்களுக்கு அந்த அருமை தெரிந்திருக்கும். வெள்ளையர் போக்கை, வெள்ளை அங்கத்தினரான, சர். பிரடரிக் ஜேம்ஸ் கண்டித்திருப்பது ஓரளவு ஆதரவளிக்கிறது.

ஆனே கடமை

கடல்கடந்த இந்தியர் விஷயத்தில் இந்திய சர்க்காருக்கு ஓரளவு அனுதாபமுண்டு. என்றாலும், இந்திய சர்க்காரால் ஒன்றும் சாதிக்க முடியாது. இந்திய சர்க்காரின் “பிரம்மா”வான இந்திய மந்திரியையே சர்க்கார் எதிர்பார்த்திருக்க வேண்டியிருக்கிறது. ஆனல், இந்தத் தீர்மானம் சம்பந்தமாக எம். எஸ். ஆனே குறிப்பாகச் சில வார்த்தைகள் கூறினார். இந்த ஒப்பந்தம்பற்றி, ஒரு சரியான முடிவுக்கு வராவிடில், ஆனே சட்டசபையின் யோசனையைக் கேட்கப் போவதாகக் கூறியிருக்கிறார். இந்திய மந்திரி, இந்த ஒப்பந்தத்தைத் திருத்தி அமைக்கப் ஒருப்படாமல், அதில் குறுக்கிடுவாரேயானல், ஆனே, இந்திய மந்திரியுடன் இந்தியர் உரிமைக்காகப் போராடத் தீர்மானித்திருக்கிறரென்பது ஆனேயின் பேச்சிலிருந்து தெரிகிறது. ஆனேயின் உறுதியை மெச்சுகிறோம். சட்டசபையின் உரிமைகளை பாதுகாக்க ஆனே தீர்மானித்திருக்கிறார். இந்திய மந்திரி வழிக்கு வராவிடில், அவர் செய்யும் இடையூறுகளை அம்பலத்துக்குக் கொண்டு வர ஆனே தயங்கக்கூடாது. அப்படியானல்தான் இந்தியர் உரிமைகளையும், இந்திய சட்டசபையின் கடமைகளையும் பாதுகாக்க முடியும். ஆனே, அவர் கடமையைப் பூர்ணமாக நிறைவேற்றிவைப்பாரென்று நம்புகிறோம். இதற்கிடையில் ஒப்பந்தத்தில் திருத்தங்கள் செய்ய முடியாது என்று பர்மா முதன் மந்திரி, ஊ ஸா லண்டனிலிருந்து எரிசடையைக் காட்டுகிறார்! என்னதான் எரி சடையைக் காட்டிலுைஞ் சரி, அல்லது, நெற்றிக் கண்ணைக் காட்டி உருட்டினலுஞ் சரி, பர்மா-இந்திய ஒப்பந்தம் குற்றம், குற்றமே! அந்த ஒப்பந்தத்தை அடியோடு மாற்றியே தீரவேண்டும்; மாற்றாத வரையில் இந்தியர் சும்மா இருக்கப் போவதில்லை. அவர்கள் உரிமைகளை நிலைநாட்டப் போராடியே தீருவார்கள்; இது நிச்சயம்.

சல சலப்பு!

பர்மா-இந்திய ஒப்பந்தம் ஒருபுறம் இழுபறியில் இருந்து கொண்டிருக்கும்போது, இலங்கை-இந்திய ஒப்பந்தம் மற்றொரு புறம் இந்தியர் உரிமைகளைப் பறிக்கச் சமயம் பார்த்துக் கொண்டிருக்கிறது. இலங்கை சர்க்காரின் ஸ்தல ஸ்தாபனங்களின் மந்திரியான பண்டார நாய்க்க, இலங்கை-இந்திய ஒப்பந்தம், இந்தியருக்கே அனுகூலமாக இருக்கிறது; 100க்கு 90 சத விகிதம் இந்தியர் அனுகூலம் பெற்று விட்டார்கள்; பாக்கி இருக்கும் 10 சத உரிமைகளையும் பெறக் கிளர்ச்சி செய்து வருகிறார்கள்! இலங்கையிலுள்ள 9 லக்ஷம் இந்தியரும் பூர்ண உரிமை பெற்றுவிட்டால், இலங்கைச் சிங்களவர் இலங்கையை விட்டு ஓடவேண்டியதுதான்! அவ்வித ஆபத்து வருமுன், இலங்கையர் உடனே தீவிர கிளர்ச்சி செய்ய வேண்டுமெனச் சிங்களவர்களை அவர் தூண்டி விடுகிறார். பாண்டார நாயக்காவின் சல சலப்பைக் கண்டு, சிங்களவரோ, இந்தியரோ பயப்படவேண்டிய அவசியமில்லை. ஒன்றுமில்லாத ஒப்பந்தத்தை பண்டார நாயக்க பிரமாதப் படுத்துகிறார். பர்மா-இந்திய ஒப்பந்தத்துக்கு, இலங்கை-இந்திய ஒப்பந்தம் தங்கைதான்! இங்கும் இந்தியர் உரிமைகள் பறிபோகின்றன. அந்த உரிமைகளுக்காக இந்தியர் போராடி, உரிமைகளைப் பெற்றுவிடுவார்களோ என்று அஞ்சி, அதற்கு முன் கூட்டியே முட்டுக்கட்டை போடவே பண்டார நாயக்க, இந்தச் சலசலப்பில் இறங்கி இருக்கிறார்! இந்த சல சலப்பைக் கண்டு இந்தியர் அஞ்சப் போவதில்லையென்பதை அவர் அறிந்து கொள்ளுவாராக.

இந்த யுத்தம்! எங்குபோய் முடியும்?

கோபல்ஸ் "அவுட்"!

ஸ்டாலின்.

சுமார் 2,000 மைல்கள் நீளமுள்ள ரஷியப் போர் முனைகளில்தான், இன்று ரஷியப் போர் மும்முரமாக நடந்துகொண்டிருக்கிறது. வடக்கே லெனின்கிராட்டிலிருந்து ஜெர்மனியர் குறி வைத்துத் தாக்குகின்றனர். சில மாதங்களாகத் தாக்கியும், லெனின்கிராடைக் கைப்பற்ற ஜெர்மனியரால் முடியவில்லை. அடுத்த போராட்டம் மாஸ்கோ; மாஸ்கோவுக்குச் சுமார் 20 மைல் தூரத்தில்தான் ஜெர்மன் ராணுவங்களிருக்கின்றன. இருந்தாலும், மாஸ்கோவை நெருங்க முடியவில்லை. லெனின்கிராடைப்போல், ரஷியர் தீவிரமாகச் சண்டை செய்து வருவதுபோல், மாஸ்கோவைப் பாதுகாக்கவும் மும்முரமாகப் போராடி வருகின்றனர். மாஸ்கோவை விட்டுத் தெற்கே மாஸ்கோவுக்குத் தென் கிழக்கேயுள்ள டோன் என்ற இடத்திலும் ஜெர்மனியர் கடுமையான போராட்டத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். அடுத்தது கிரிமியா போராட்டம். கிரிமியா தீபகற்பத்தை தரைமார்க்கமாகவும், ஆகாய மார்க்கமாகவும், கடல் மார்க்கமாகவும் ஜெர்மனியர் தாக்கி வருகின்றனர். கிரிமியாவின் முக்கிய துறைமுகமாகிய செபஸ்டபுல் நகருக்குச் சுமார் 20 மைல் தூரத்தில், ஜெர்மன் ராணுவங்கள் வந்துவிட்டன. அங்கு மும்முரமான போராட்டம் நடந்து வருகிறது.

ஜெர்மன் "அவுட்"!

கிரிமியா தீவைப் பிடித்து விட்டதாகவும், அங்கு ஜெர்மனியர் ஆதிக்கம் இருந்து வருவதாகவும், அங்கிருந்து ரஷியருக்குத் தப்பி ஓடக் கூடப் படகுகள் கிடையாதென்றும் ஜெர்மன் ரேடியோக்கள் புளுகிக் கொண்டிருக்கின்றன! கிரிமியாவில் ரஷியர் தீவிரமாகப் போராடி வருவது, ரஷிய செய்திகளிலிருந்து தெரிகிறது. எல்லாப் போர்முனைகளிலும், ரஷிய ராணுவங்களைப் பிளந்து கொண்டு போய்விட்டதாக ஜெர்மனியர் சொல்லுகிறார்கள். இந்தச் செய்தி இன்று தெற்கு வரவில்லை; தினசரி ஜெர்மன் செய்திகள் இப்படியே வந்து கொண்டிருக்கின்றன.

எல்லாப் போர்முனைகளிலும் ரஷியர் எதிர்த்துத் தாக்கி வருகிறார்களென்று ரஷியர் சொல்லுகிறார்கள். மாஸ்கோமீதுதான் இன்று ஜெர்மனியர் விசேஷ கவனஞ் செலுத்தி வருகிறார்கள். இந்தச் சமயத்தில் சோவியத் தேசிய தினத்தையொட்டி ஸ்டாலின் ரஷிய மக்கள், ரஷிய ராணுவ, கடற்படை வீரர்களுக்கும் ஒரு பிரசங்கஞ் செய்தார்.

ஸ்டாலின் கர்ஜனை!

ஸ்டாலின் பேசிக்கொண்டிருந்த சமயத்தில் மாஸ்கோமீது ஜெர்மன் விமானங்கள் வந்தன. அந்த விமானங்களைக் கண்டு ஸ்டாலின் பயப்படவில்லை. அவர் பிரசங்கத்தைத் தொடர்ந்து செய்தார். ஆனால், ஜெர்மன் விமானங்கள், ரஷிய விமானங்களால் துரத்தியடிக்கப்பட்டன. ஸ்டாலினின் வீரம் ததும்பும் பேச்சு ரஷிய மக்களுக்குப் புதிய உற்சாகத்தைக் கொடுத்திருக்குமென்பதில் சந்தேகமில்லை. இந்த யுத்தத்தில் ரஷியர் மொத்தம் 14 லக்ஷம் சோல்ஜர்களை இழந்திருக்கின்றனர்; ஜெர்மனியருக்கோ சுமார் 45 லக்ஷம் சோல்ஜர்கள் நஷ்டமேற்பட்டிருக்கக் கூடுமென்று ஸ்டாலின் சொன்னார். என்னவானாலுஞ் சரி, இந்த யுத்தத்தில் ரஷியர் இரண்டிலொன்று பார்த்துவிட வேண்டுமென்று ஸ்டாலின் கர்ஜித்தார்! ரஷியாவுக்குத் தோல்விதான்; என்றாலும், ஒவ்வொரு அங்குலத்துக்காகவும் ரஷியர் போராடினார்கள். ரஷியாவிடம் போதிய ஆள் பலம் இருக்கிறது; ஆனால், போதிய யுத்த தளவாடங்கள் இல்லை. டாங்கிகளே ரொம்ப அவசியம். ரஷியாவிடம் போதிய டாங்கிகள் இருந்திருக்குமேயானால், இவ்வளவு தூரம் ரஷியர் பின்வாங்க வேண்டி வந்திருக்காது. பிரிட்டனும், அமெரிக்காவும் ரஷியாவுக்கு யுத்த தளவாடங்கள் சப்ளை செய்து வருகின்றன. ஆனால், அந்த யுத்த தளவாடங்கள், விசேஷமாக டாங்கிகள் போதாது. ரஷியாவுக்கு ஏராளமான டாங்கிகள் கிடைக்குமேயானால், ஜெர்மனியரை எதிர்த்து, முன்னேற விடாமல் தடுக்க முடியுமென்று ஸ்டாலின் சொல்லுகிறார்.

ரஷிய உதவி விளம்பர மந்திரி ஸ்லோவாஸ்கி.

ஹெஸ் மர்மம்!

ஹிட்லரின் வலது கை போன்றிருந்த ருடால்ப் ஹெஸ் பிரிட்டனுக்குப் பறந்துபோனது பெரிய மர்மமாக இருந்தது; அந்த மர்மத்தை ஸ்டாலின் இன்று வெளியாக்கிவிட்டார். ரஷியாமீது படையெடுக்கு முன், பிரிட்டனை, ஜெர்மனி பக்கம் திருப்பவே, ஹெஸ் பிரிட்டனுக்குப் பறந்து சென்றாராம். ஹெஸ் பறந்து போனது ஒருவகையில் நன்மைக்கே. ஜெர்மனி ரஷியாமீது படையெடுக்கப்போகிறதென்பதை ரஷியா முன்னாடியே அறிந்துகொண்டது. பிரிட்டனும், அமெரிக்காவும், ஜெர்மனியின் நோக்கத்தை ஏற்கனவே அறிந்துகொள்ள அது ரொம்ப உதவியாக இருந்தது. ரஷியாவை ஜெயித்தபின், ஜெர்மனி, பிரிட்டன் மீதும், அமெரிக்காமீதும் பாய்ந்தே தீரும். அந்தவிதமான ஆபத்துக்குள்ளாகாமல், அந்த இரு நாடுகளும், ரஷியாவுடன் சேர்ந்து, ஜெர்மனியை எதிர்க்க ஹெஸ் மறைமுகமாக உதவியாக இருந்தார். இது உலகத்துக்கே ஒருநல்ல சகுனந்தான், ஹெஸ் பிரிட்டனுக்குப் பறந்து போனது ஒரு பெரிய மர்மமாக இருந்தது. இந்த மர்மத்தை பிரிட்டிஷார் இதுவரையில் மூடி வைத்திருந்தார்கள். அந்த மர்மமும் இப்பொழுது வெளியாகிவிட்டது. நாஜி ஜெர்மனியின் மாய தந்திரங்கள் இன்னமும் எவ்வளவு தூரம் போகிறதென்பதைப் பார்ப்போம்.

பலிக்கவில்லை!

நாஜியரின் மின்னல் வேக யுத்தம் ரஷியாவிடம் பலிக்கவில்லை. ஐரோப்பாவில் பல தேசங்களைச் சில தினங்களிலும், வாரங்களிலும் ஜெயித்த ஜெர்மனியின் வேகம், ரஷியாவிடம் குறைந்துவிட்டது. 10 வாரங்களில் ரஷியாவை ஜெயிக்கப்போவதாகக் கூறிய ஹிட்லர், 20 வாரங்களாகியும் ரஷியாவை ஜெயிக்க முடியவில்லை. ரஷியாவின் முக்கிய துறைமுகங்களாகிய லெனின்கிராட், மாஸ்கோ, முதலியவைகூட இன்னம் பிடிக்க முடியவில்லையென்றால், ரஷியாவில் ஜெர்மனியர் வேகம் எவ்வளவு குறைந்துவிட்டது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். ரஷியர் உயிருக்காகப் போராடிக்கொண்டிருக்கிறார்கள்; அவர்கள் கடைசிவரையில் போராடியே தீருவார்கள். ஸ்டாலின் பேசியதுபோல், பிரிட்டனில் சர்ச்சிலும், அமெரிக்காவில் ரூஸ்வெல்ட்டும் பேசினார்கள். இருவர் பேச்சும் வீரம் ததும்புவதாகத்தானிருந்தது. பிரிட்டிஷார் ஆபத்துக்களைக் கடந்து விட்டார்கள்; சமாதானப் பேச்சு வந்தாலும் போர் நடக்கும்; நாஜிப் பேயை நசுக்கியே தீரவேண்டும் என்று சர்ச்சில் ஆக்ரோஷத்துடன் பேசினார். ரூஸ்வெல்ட் என்றும்போல் வழ வழாப் பேச்சில், பட்டும் படாமலும் ராஜ தந்திரப் பாஷையில் எதிர்கால உலக அமைப்பைப்பற்றிப்பேசி முடித்தார்!

ரஷிய ராணுவத் தளகர்த்தர் மார்ஷல் வோரோஷிலாவ்.

ரஷியப் பெண்கள், ஆடவரைவிட வீரத்தில் குறைந்தவர்களல்ல; ஏராளமான பெண்கள், இன்று, ரஷியப் போர் முனைகளுக்குச் சென்று, ஜெர்மனியரை எதிர்த்துப் போராடுகின்றனர். போர்க்களத்திலுள்ள ஒரு ரஷியப் பெண், எதிரிகள்மீது சிறு வெடிகுண்டு எறிவதைப் படத்தில் காண்க.

ரஷிய கர்ஜனை! :-: :-: ஜப்பான் உறுமுகிறது!



பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சில், லண்டனில் சேதமடைந்த இடங்களைப் பார்வையிடுகிறார்.



பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்களில் ஒன்றாகிய "ரினௌன்". இது மத்தியதரக் கடலிலிருக்கிறது.

ஜெர்மனியில் பரபரப்பு!

கோபல்ஸ் சங்கடம்!

ஜெர்மன் பிரசார மந்திரி கோபல்ஸ் விடாமல் புளுகிக்கொண்டே வந்தார். புளுகுவதில் அவர் நிபுணர்! மெடல் பெற்றவர்! என்றாலும், யானைக்கும் அடி சறுக்குமென்றுசொல்லுவார்கள். அப்படியே அவருக்கு அடி சறுக்கியது! அவரையும் அறியாமலே ஒரு உண்மையை சொல்லிவிட்டார். அது ஜெர்மனி எங்கும் காட்டுத் தீபோல் பரவி விட்டது! இந்த யுத்தம் எப்பொழுது முடியுமென்பதைப்பற்றிக் கவலை இல்லை; ஆனால், எப்படி முடியப் போகிறதென்பதைப் பற்றியே ஜெர்மனியர் கவலைப்பட வேண்டும் என்று ஒரு பத்திரிகையில் எழுதியிருக்கிறார். இதிலிருந்து ஜெர்மன் வெற்றியில், ஜெர்மனியருக்கே நம்பிக்கை இல்லையென்பது தெளிவாகிறது. இதுதான் ஜெர்மனியில் பரபரப்பு ஏற்படக் காரணம். இந்த யுத்தத்தில் எப்படியும் ஜெர்மனி வெற்றிபெற்றே தீரவேண்டும்; இன்றேல், ஜெர்மனிக்கு ஆபத்து; இன்னம் பல வருடங்கள் கழிந்தால்கூட இவ்வித போராட்டத்தை நடத்தமுடியாது. இந்த யுத்தம் எங்கு போய் முடியுமென்ற கவலையின்றி யுத்தத்தைத்தீவிரமாக நடத்த வேண்டுமென்று கோபல்ஸ் அபிப்ராயப்படுகிறார். இந்த யுத்தத்தில் ஜெர்மனி தோல்வி படையுமேயானால், ஜெர்மனியே தொலைந்து விடுமென்று அவர் எச்சரிக்கிறார்! இது எதிர்பார்த்ததே! ஜெர்மனியரும் இந்த முடிவை எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதுதான்! ஜெர்மனி, யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தினாலும், பின்லந்து யுத்தத்தை நிறுத்திவிடப்போவதாக ஒரு செய்தி கிடைத்திருக்கிறது. மற்றொரு பக்கம் ஜப்பான் யுத்தத்தை ஆரம்பிக்கப் போவதாக உறுமுகிறது! ரஷியாவை நம்பிக்கொண்டிருக்க முடியாதாம்; ஜப்பானின் பொறுமை அளவுகடந்துவிட்டது; ஆகவே, ஜப்பான் இனிமேல் யுத்தத்தில் இறங்கவேண்டியதுதான் என்று ஜப்பான் சர்க்கார் அதிகாரிகளில் ஒருவர் ரஷியாவைப் பூச்சாண்டி காட்டினார்! ஜப்பான் போக்கு ரஷியாவுக்குத் தெரியும்; ரஷியா ஜப்பான் யுத்தத்தை எதிர்பார்த்து யுத்தத்துக்குத் தயாராகவே இருக்கிறது. இந்த யுத்தத்தில் ரஷியா நீண்டகாலம் சமாளிக்க முடியுமென்று, ரஷியப் போர்முனையிலிருந்து திரும்பிய ஒரு ராணுவ நிபுணர் அபிப்பிராயப்படுகிறார்.

பிரிட்டனுக்குப் பறந்து சென்ற ருடால்ப் ஹெஸ். இவர் பிரிட்டனுக்குப் பறந்து சென்றதின் மர்மம் இப்பொழுதுதான் வெளியாகியிருக்கிறது.

"அண்டப் புளுகன்" கோபல்ஸ்.

ஹிட்லர்.

எது வேண்டும்?

இலக்கியமா?
சரித்திரமா?
அரசியலா?
பொருளாதாரமா?
எல்லாம் நிரம்பியது

-: ஹரிஜன் :-

எல்லா ஊர்களிலும் முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை. "ஹரிஜன்" காரியாலயம், சிதம்பரம்.

டாக்டர். சுப்பராயன்,
சென்னை.

மாஜி மந்திரி,

பல காங்கிரஸ் தலைவர்கள், மாஜி மந்திரிகளைப்போல் நீங்களும் காந்திஜியைக் கண்டு பேசச் சென்றீர்கள். ஆனால், இதர தலைவர்களைப் போல், அல்லது, மந்திரிகளைப் போல் திரும்பி வராமல், ஒரு அற்புதமான செய்தியுடன் வந்திருக்கிறீர்கள்! காங்கிரஸ்காரர் சட்டசபைகளுக்குப் போகவேண்டும்; மந்திரி பதவிகளைக் கைப்பற்ற வேண்டுமென்று நீங்கள் சொல்லவில்லை; மீண்டும் சத்தியாக்கிரகஞ் செய்து சிறை செல்லப் போவதாக நீங்கள் சொல்லுகிறீர்கள். இது அற்புதமான செய்திதான். தமிழர் இச்செய்தி கேட்டுப் பூரிப்படைவார்களென்பதில் சந்தேகமில்லை. சத்தியாக்கிரகம், போராட்டம், சிறைவாசம் என்று வெளியில் சொல்லிக்கொண்டிருப்பதால் பயனென்ன? நீங்கள் மீண்டும் சிறை செல்லத் துணிந்துவிட்டீர்கள்; இதர மந்திரிகளும், தலைவர்களும் வெளியில் ஏன் வீண் காலங் கடத்துகிறார்கள்? அவர்கள் கூட்டங்களுக்குச் சென்று, சத்தியாக்கிரகப் போராட்டத்தைப்பற்றிச் சரமாரி பேசுவதைவிட, அவர்கள் மௌனமாகச் சிறைசெல்லுவதே சிறந்த உபதேசமாக இருக்கும். உங்களைப் பின்பற்றி, இதர காங்கிரஸ் தலைவர்களும், மாஜி மந்திரிகளும், சட்டசபை அங்கத்தினர்களும் சிறை செல்ல முன் வருவார்களாக.

டிங்—டாங்.

டாக்டர். பட்டாபி சீதாராமய்யா,
மசூலிப்பட்டணம்.

ஆந்திர சிங்கமே!

விசாரணையின்றிச் சிறையில் வைக்கப்பட்ட நீங்களும், சென்னை சட்டசபைத் தலைவர், புலூசு சாம்பமூர்த்தியும், சிறையிலிருந்து வெளி வந்து விட்டீர்கள். புலூசு சாம்பமூர்த்தி, அவருடைய சட்ட சபைக் காரியாலயத்தைக் கவர்ந்து கொள்ளுவதில் கண்ணாயிருக்கிறார்; இதுவரையில் வாய் திறந்து ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. நீங்கள் பேசினீர்கள்; பதவிப் பித்தர்களுக்குச் சரியான போடு போட்டீர்கள்! "போராட்டம் நடந்து கொண்டிருக்கும்போது, இடையில் குறுக்கிட்டு, அதைப்பற்றிக் குறை கூறுவது முட்டாள்த்தனம்! தலைவரிடம் நம்பிக்கை இருக்கும்போது, போராட்டத்தை நிறுத்திவிட்டு, சட்ட சபைக்குப் போகவேண்டும்; மந்திரி பதவிகளை ஏற்க வேண்டுமென்று சொல்லுவதில் அர்த்தமே இல்லை" என்று சிறையிலிருந்து வெளிவந்ததும் சொன்னீர்கள். சிறையிலிருந்து வெளிவந்த எந்தத் தலைவரும், பதவி ஏற்கவேண்டுமென்று சொல்லவில்லை. மூர்த்தி ஒருவரே, சிறையிலிருந்து வெளிவந்த மறு நிமிஷத்தில் அந்தப் பிரசாரத்தை ஆரம்பித்தார். அவர் வாயும் மூடிவிட்டது; அவர் தோல்வியை அவரே ஒப்புக் கொண்டுவிட்டார். இன்னமும் பிரசார

மணியோசை

உரிமை வேண்டுமென்று அடித்துக் கொள்ளுகிறார்! அவருடன் சேர்ந்த ஒரு சில இந்திய சட்ட சபை அங்கத்தினர்களுக்கும், இந்தப் பதவிமோகம் இருந்து கொண்டிருக்கிறது. அவர்கள் பித்தமும் சீக்கிரத்தில் தெளிந்துவிடுமென்று நம்புகிறேன். அவர்களுக்கு உங்கள் வார்த்தைகளை அப்படியே அர்ப்பணஞ் செய்கிறேன்.

டிங்—டாங்

சர். சி. பி. ராமசாமி ஐயர்,
திருவனந்தபுரம்.

திவான்ஜி,

உங்கள் இனத்தைச் சேர்ந்த ஒரு "தனிக் கும்பல்" தமிழ் பாட்டுக்களையும், தமிழிசையையும், அலட்சியமாக நினைத்து, எதிர்த்து வரும்போது, நீங்கள் தமிழ் திருவாசகம், ஆழ்வார் திருவாய் மொழிகள், நாயன்மார் தேவாரம் முதலியவைகளைப் பாராட்டி, அவைகளின் உயர்ந்த கருத்துக்களைச் சிலாகித்துப் பேசுவதைக்கண்டு சந்தோஷிக்கிறேன். அகத்தில் வடமொழிப் பற்றுக் கொண்ட உங்கள் இனத்தினர் சிலருக்கு, இது விபரீதமாக இருக்கலாம். என்றாலும், 4 வருடங்களாகத் தேவாரம், திருப்புகழ் கற்றுவரும் உங்களுக்கு இது விபரீதமாகத் தோன்றதென்றே நினைக்கிறேன்! தமிழில் உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் புதிய ஆர்வம் மெச்சத் தக்கது.

டிங்—டாங்

ஜனுப். கியாஸுதீன்,
புது-டில்லி.

தேசீய லீகரே!

நீங்கள் லீகிலிருந்து விலகிவிட்டீர்கள். ஏன்? ஜின்னு சாஹேபின் போக்கு உங்களுக்குப் பிடிக்கவில்லை. வைசிராய் நிர்வாக சபையில் லீகருக்கு அதிக ஸ்தானங்கள் கொடுக்கவில்லை என்ற காரணத்துக்காக லீகர், இந்திய சட்டசபையிலிருந்து வெளியேறியது பெரிய தவறு. யுத்த முயற்சியில் ஒத்துழைப்பதில்லையென்று ஜின்னு வெளிக்குச் சொல்லிக்கொள்ளுகிறார்; ஆனால், லீகரோ எல்லா யுத்த முயற்சிகளிலும் ஈடுபட்டிருக்கின்றனர். மைனாரிட்டிகள் சம்மதமின்றி, இந்தியாவுக்கு ஒரு அரசியல் திட்டம் கொடுக்கக் கூடாது என்று பிரிட்டிஷ் சர்க்காரை ஜின்னு கேட்டார். அதற்கும் பிரிட்டிஷ் சர்க்கார் ஒப்புக் கொண்டார்கள். அதுவும் போதாதென்று, நிர்வாக சபையிலும் அதிக ஸ்தானங்கள் கேட்பது அநியாயமேயாகும். அவ்வாறு சகல அதிகாரங்களையும், லீகரே கைப்பற்றிக்கொண்டு, மேஜாரிட்டி வகுப்பினரை, மைனாரிட்டி வகுப்பினர் அடக்கி ஆள நினைப்பது ஒரு போதும் நியாயமல்ல என்பதை

உணர்ந்து, நீங்கள் லீகிலிருந்து ராஜிநாமா செய்தீர்கள். உங்கள் நேர்மையான கொள்கையைப் பாராட்டுகிறேன். உங்களைப் பின்பற்றி இதர லீகரும் ராஜிநாமா செய்து வெளி வருவார்களா? அவ்வாறு வெளிவர யாரும் தயாராக இருக்கமாட்டார்கள். ஏராளமான அதிகாரத்தைப் பெறவும், அதிகப் பதவிகள் கிடைக்காதாவென்று வாய் திறந்துகொண்டிருக்கும் லீகருக்கு அவ்வளவு தைரியம் வருமென்று நான் நினைக்கவில்லை. ஆனால், இப்பொழுது அவர்கள் வெளிவராவிட்டாலும், அவர்கள் வெளிவரக் கூடிய காலம் நெடுந் தூரத்தில் இல்லையென்றே நினைக்கிறேன்.

டிங்—டாங்.

சர். ரெஜினல்ட் மாக்ஸ்வெல்,
புது-டில்லி.

துரையே,

தியோலி சிறையில் சுமார் 225 பாதுகாப்புக் கைதிகள் பல தினங்களாகப் பட்டினி கிடந்தும், உங்கள் பிடிவாதம் தளர்ந்ததாகக் காணும். அவர்களில் ஒருவர் ஆபத்தான நிலைமையிலிருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. உண்ணு விரதத்தை நிறுத்தினாலொழிய, அவர்களின் குறைகளைக் கவனிக்க முடியாது என்று, நீங்கள் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று சாதித்து, விதண்டாவாதம் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்! இது வீண் அதிகாரத் திமிர்! காரியம் முற்றிவிட்டது; 225 பேர் பட்டினி கிடக்கின்றனர். அவர்கள் உயிர் முக்கியமேயொழிய, உங்கள் பிடிவாதம் முக்கியமல்ல. உயிரின் அருமை தெரிந்திருந்தும், இவ்வாறு பிடிவாதஞ் செய்வது முறையல்ல; அது மூர்க்கத்தனமேயாகும். தியோலிக் கைதிகள் எதற்காக உண்ணு விரதம் ஆரம்பித்தார்கள்? அவர்கள் குறைகளைச் சர்க்கார் சரிவரக் கவனிக்காததால்தான். அந்தக் குறைகளைக் கவனித்தால் அல்லது, கவனிப்பதாகச் சொன்னால், உண்ணுவிரதத்தை உடனே அவர்கள் நிறுத்திக்கொள்ளுவார்கள். அதற்கின்றி, உண்ணு விரதத்தை நிறுத்தினாலொழிய வாய் திறக்கமாட்டேன் என்று சொல்லுவது அதிகப்பிரசங்கித்தனமாகும். இதனால் ஏற்படக் கூடிய ஆபத்தை உணர்ந்து, விட்டுக் கொடுப்பதே புத்திசாலித்தனம்; மக்கள் கொதிப்புக்கும், கண்டனத்துக்கும் சர்க்காரை உள்ளாக்கவேண்டாம்; ஞாபகமிருக்கட்டும்.

டிங்—டாங்.

ராஜா சர். அண்ணாமலைச்செட்டியார்,
புது-டில்லி.

கலை வள்ளலே!

தமிழ் கலைக்கும், இசைக்கும் நீங்கள் செய்த பேருதவி ஒருபுறமிருக்கட்டும்; இந்திய சட்டசபையில், பர்மா-இந்திய ஒப்பந்தத்தைப்பற்றி நீங்கள் பேசியதைக் கவனிப்போம். அந்த ஒப்பந்தம் கவைக்குதவாதது; மானமுள்ள இந்தியர் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒப்பந்தமல்லவென்பதை நீங்கள் சுருங்கச் சொல்லி விளங்கவைத்தீர்கள். "அந்த ஒப்பந்தத்தை ஆதரித்து ஒரு வார்த்தை கூடச் சொல்ல முடியாது. எம். எஸ். ஆனே வீட்டு வாசலில், சர். வாஜ்பேயர் விட்டுப்போன ஒரு திக்கற்ற குழந்தை அந்த ஒப்பந்தம்! பர்மாவின் செழிப்புக்குக் காரணமாயிருந்தவர்கள் இந்தியர்; அந்த இந்தியருக்கு இந்த ஒப்பந்தம் கடுமையான தண்டனை விதிக்கிறது!" என்று சொன்னீர்கள். ஆம்; அது உண்மை. ஆனே வாசலில் அநாதையான அந்தத் திக்கற்ற குழந்தையைப் போட்டுவிட்டு, சர். வாஜ்பேயர், அவசரம் அவசரமாக அமெரிக்காவுக்குக் கம்பி நீட்டிவிட்டார்! ஒன்றுமறியாத ஆனே, அந்த அநாதைக் குழந்தையோடு மாரடிக்க வேண்டியிருக்கிறது! பாவம்; ஆனேக்காக இரங்குவதைத் தவிர நீங்களோ, அல்லது, நானோ வேறு என்ன செய்யமுடியும்? அந்த திக்கற்ற குழந்தையைத் தீண்டுவாரு மில்லை; தேடுவாரையும் காணும்! திக்கற்ற குழந்தையாகிய அந்த ஒப்பந்தம், பிறந்த நேரப் பலனோ, அல்லது, ஆனே பதவி ஏற்றுக்கொண்ட நேரப் பலனோ என்னமோ தெரியவில்லை; அதற்கு நாட்டில் இவ்வளவு எதிர்ப்பு ஏற்பட்டிருக்கிறது! ஆனே, இதற்கு என்ன வழி கண்டு பிடிக்கப் போகிறார் என்பதைப் பொறுத்துப் பார்ப்போம்.

டிங்—டாங்

ஜம்னதாஸ் மேத்தா,
புது-டில்லி.

தேசீய வீரரே!

பர்மா-இந்திய ஒப்பந்தத்தைப் பற்றி இந்திய சர்க்காருக்கு மண்டையில் அடித்தாற்போல் பதில் சொன்னீர்கள். வெளிநாடுகளிலுள்ள இந்தியர் கஷ்டங்களைச் சர்க்கார் அறிந்திருந்தும், அதற்குக் கொஞ்சங்கூட உணர்ச்சியில்லை; ஒரு உதவாக்கரையாக இருக்கிறது! இவ்வித ஒப்பந்தம் செய்து கொள்ளக் கூடியவர் ஹிட்லரே என்று சொன்னீர்கள். இது பிரிட்டிஷாருக்கு பொல்லாத கோபத்தை உண்டுபண்ணியிருக்கலாம். ஆனால், பிரிட்டிஷார் கோபங் கொள்ளுவது நியாயமல்ல; அட்லாண்டிக் யுத்த லட்சிய ஒப்பந்தம் எப்பேர்ப்பட்டது? அது இந்தியாவுக்குச் செல்லாது என்று சர்ச்சில் சொல்லவில்லையா? அதேபோல் பர்மா-இந்திய ஒப்பந்தத்தை இந்தியர் ஏற்றுக்கொள்ளவில்லை; எதிர்க்கின்றனர். ஆனால், ஒப்பந்தம் என்ற முறையில் ஒப்பிட்டுப் பார்த்தால், அவாளுக்கு இவாள் எழுந்திருந்து உண்பாள்தான்! நீங்கள் சொன்ன ஹிட்லருக்கு, மற்றவர்கள் சப்பட்டையல்ல!

டிங்—டாங்

மிஸ்டர். அமெரி,
லண்டன்.

இந்திய மந்திரியே,

பர்மிய முதன் மந்திரி ஊ ஸா பர்மாவுக்கு சுதந்திரம் கேட்டு லண்டனுக்கு ஓடி வந்தார். உங்களைக் கண்டு பேசினார்; பிரதம மந்திரி சர்ச்சிலையும் கண்டு பேசினார். பேசியதின் பலன் என்ன? வெறும் தலையசைப்பு. பர்மா சுதந்திரத்தைப்பற்றிப் பேச்சையே காணும். ஊ ஸா உங்களிடம் டொமீனியன் அந்தஸ்துக் கேட்டார்; நீங்கள் என்ன பதில் சொன்னீர்கள்? டொமீனியன் அந்தஸ்தைப்பற்றிப் பிரமாதமாய்ச் சொன்னீர்கள். அந்த டொமீனியன் அந்தஸ்து என்னவென்பது உங்களுக்காவது தெரியுமா? எனக்கு என்னமோ சந்தேகந்தான்! தெரியாத ஒரு விஷயத்தைத் தெரிந்ததுபோல் பாவனை செய்து கொள்வது ஆபத்து! கடைசியில் ஊஷா என்னவானார்? மனமுடைந்து திரும்பினார். அவர் அழுகுரல் உலகமெல்லாம் கேட்கிறது! பாவம்! உங்களை நம்பி ஓடிவந்தவரை இப்படி மன முடைந்து திரும்பி வரச் செய்யலாமா? இந்த வினை உங்களைச் சும்மா விட்டுவிடாது. எப்படியும் வினைப் பயனை அநுபவிக்க வேண்டியது வந்துதான் தீரும். அதை மறந்து விடாதீர்கள்.

டிங்—டாங்.

சூளை கண் ஆஸ்பத்திரி (கவர்ன்மெண்டு ரிஜிஸ்டர்)

டாக்டர் எடுக்கச் சொல்கிற கண் எடுக்காமல் குணமாகும்.

கண் ஆச்சரிய பார்வை வரும் ஆப்ரேஷனில்லாமலே பூ, புரை, மேகநீர், உள்பூ, புரை கரைந்து அடியில் கண்ட பார்வை வரும்.

கால் குருடு $1\frac{1}{2}$ அடியில் படிக்கும் கண் $2\frac{1}{2}$ அடிக்குள் கண்ணாடியில்லாமல் படிக்க மருந்து விலை ரூ 10-8-0 அரை குருடு 1-அடி 2-அடியில் படிக்க மருந்து விலை ரூ. 21-0-0 முக்கால் குருடு $\frac{1}{4}$ $\frac{1}{2}$ அடி அதை 2 அடிவரை படிக்க மருந்து விலை ரூ. 31-8-0 நேரில் சிகிச்சை செய்ய ரூ. 60-0-0 குணமில்லையானால் பணம் வாபீஸ்; உத்திரவாத சீட்டுக்கு ரூ. 100-0-0. (முழுக்குருடு எழுத்து படிக்க முடியாத கண் ஆப்ரேஷனால் மறைந்த கண், டாக்டர் மேக நீர் கண் முடியாது என்ற கைவிட்டது நேரில் பார்த்து குணமாக்குவோம்.)

No. 8. M. சூளை ஐரோடு, சென்னை.

டம்-டம் குண்டு

முதல் பலி!)-(புல்லுருவிகள் விஷமம்!

சினிமா சிட்டுக் குருவி!

குஞ்சு, குழாங்கள் கொழுக்கின்றன!

ஓடுவது தமிழ் இரத்தமா?

தமிழ் நாட்டில், தமிழ் பாட்டுக்களேயே அதிகமாகப் பாடவேண்டும் என்ற தமிழிசை இயக்கம் தோன்றியதும், அதை எதிர்க்க, ஒரு "தனிக் கும்பல்" கங்கணம் கட்டிக்கொண்டு புறப்பட்டிருப்பதைப்பற்றிச் சென்ற வாரம் குறிப்பிட்டிருந்தேன்; அதன் எதிரொலி இன்று சென்னையில் கேட்கிறது; ஒவ்வொரு தமிழர் காதிலும் அந்த எதிரொலி விழுந்திருக்கும். தமிழிசையை எதிர்க்கும் இந்தத் "தனி கும்பல்", எவ்வளவு கட்டுப்பாடுடன் எதிர்த்து வருகிறதோ, அதேபோல், தமிழரும், இந்தக் கும்பலை எதிர்த்து மடக்கக் கட்டுப்பாடுடன் வேலை செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தேன். வெறும் எதிர்ப்புமட்டும் போதாது; இந்தக் "கும்பலை"த் தலையெடுக்க விடாமல் அடியோடு நசுக்கவேண்டுமென்றும் சொல்லியிருந்தேன். அதற்கான சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. தமிழர் ஒவ்வொருவரும் முன்வரும்படி மீண்டும் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்தத் "தனிக் கும்பலை", ஜாதிவெறி பிடித்த இந்த "விஷமக் கூட்டத்தை" இப்படியே விட்டுக்கொண்டு போனால், இந்தக் "கும்பலின்" ஜாதி வெறி தலைக்கேறிவிடும்! அப்புறம் இந்தக் "கும்பலின்" விஷமத்தைவேரறுப்பது சுலபமல்ல; புல்லுருவி போல், தமிழர் ஊனை உறுஞ்சி, தமிழர் இயக்கத்தையே குழி தோண்டிப் புதைத்துவிடவும் இவர்கள் துணிந்துவிடுவார்கள்.

* * * *

தமிழிசை இயக்கம் ஆரம்பித்ததும், அதற்கு எதிர்ப்பும் உடனே வந்தது. ஒரு "தனிக் கும்பல்" திரண்டது. இந்தக் கும்பலால் வரக் கூடிய ஆபத்தைத் தமிழ் நாட்டில் முதன் முதலில் உணர்ந்தவர், "தினமணி" ஆசிரியர், டி. எஸ். சொக்கலிங்கம். இவரே இந்தக் கும்பலைத் தீவிரமாக எதிர்த்தார். தமிழிசையை ஆதரித்தார். கூட்டங்கள் நடத்தினர். தினசரி "தினமணி" மூலம் தமிழரைத் தட்டி எழுப்பினார்; தமிழர் விழித்துக்கொண்டனர்; தமிழிசையை எதிர்த்த "கும்பலின்" எதிர்ப்பும், ஆவேசமும் கொஞ்சம் குறைந்து வந்தது. என்றாலும், எதிர்த்த "கும்பல்" எப்பேர்ப்பட்டது என்பதை அறிந்திருந்தால், இந்த எதிர்ப்பு அடியோடு புதைந்துவிடவில்லை என்பதைத் தெரிந்துகொண்டிருக்கலாம். இந்த எதிர்ப்பு இன்னமும் புதைந்து போகாமலிருப்பதற்கு, இந்தக் "கும்பலை" ஆதரிக்கத் தினசரி "இனப்" பத்திரிகைகள் பல இருப்பதே காரணமாகும். இந்த "இனப்" பத்திரிகைகளெல்லாம் ஒன்றுகூடித் தமிழிசையை எதிர்த்து வந்தன. "தினமணி" ஒன்றே, தமிழிசையைத் தீவிரமாக ஆதரித்து வந்தது. இதற்கு ஆசிரியர் சொக்கலிங்கமே காரணம். இவர் மட்டும் இந்த இயக்கத்தில் தலையிடாமலிருந்தால், தமிழிசையை எதிர்த்த "தனிக் கும்பல்" இந்த இயக்கத்தை அடியோடு நசுக்கி இருக்குமென்பது நிச்சயம். சு. ம. ஜஸ்டிஸ்காரர் தமிழிசை இயக்கத்தை ஆதரித்தார்களென்பது உண்மையே. ஆனால், அவர்கள் ஆதரவு அவ்வளவு பலனளிக்கவில்லை. சு. ம. ஜஸ்டிஸ்காரருக்கு ஜாதித் துவேஷத்தைக் கிளப்புவதே வேலையென்று சொல்லி, இந்தக் "கும்பல்" தலையெடுத்திருக்கும். அது தலை நீட்டாமல் தடுத்து, மடக்கிய பெருமை ஸ்ரீ. சொக்கலிங்கத்தையே சாரும்.

* * * *

"தின மணி" ஆசிரியருடன் ஒரு சில தமிழ் எழுத்தாளரும், தமிழ் புலவர்களும் சேர்ந்துகொண்டனர். அதனால் இந்த இயக்கம் வெற்றி பெற்றது; இறுதியில் அது வெற்றி பெற்றே தீரும். அதில் சந்தேகமே வேண்டாம். தமிழரின் ஏகோபித்த ஆதரவு இருக்கும் வரையில், தமிழிசை இயக்கத்தை எவராலும், எந்தக் "கும்பலாலும்" எதிர்த்து நிற்க முடியாது; ஒரு கும்பலல்ல; ஆயிரம், ஆயிரம் "கும்பல்"கள் ஒன்று சேர்ந்தாலும், தமிழிசையையோ, தமிழர் இயக்கத்தையோ நசுக்கிவிட முடியாது! தமிழரின் தீவிர உணர்ச்சியைக் கண்டதும்; இந்தத் "தனிக் கும்பலின்" இனத்தைச் சேர்ந்த ஒரு சிலருக்கு இனிமேல், தமிழரிடம் அவர்கள் ஜம்பம் சாயாது என்பது தெரிந்துவிட்டது. வெளிக்குத் தமிழிசையைத் தீவிரமாக ஆதரிக்க முன்வந்திருக்கிறார்கள். வயிற்றுப் பிழைப்பே இதற்கு முக்கிய காரணம். இதைத் தவிர, அவர்களுக்குத் தமிழிசையில் உண்மையான அன்போ, ஆர்வமோ கிடையாது. அவர்கள் உள்ளத்தில் கள்ளம், உதட்டிலே வெல்லம்! தமிழர் மெச்சிக் கொள்ளப் பேசுகிறார்கள்; எழுதுகிறார்கள்!

* * * *

வேறொரு "கும்பலும்" தமிழ் நாட்டிலிருக்கிறது. இந்தக் "கும்பல்" மேலே கூறிய "தனிக் கும்பலின்" "குஞ்சு குழாங்கள்"! தமிழ் நாட்டிலே மகாப் பெரிய எழுத்தாளர் என்பது, இந்தக் "குஞ்சு குழாங்களின்" இறுமாப்பு! தங்கள் எழுத்து வன்மையாலும், "இனப்" பத்திரிகைளின் உதவியாலும் தமிழரை மடக்கி விடலாமென்ற திமிர்கொண்டு அலைகின்றனர்! இது வெறும் பகற்கனவு என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. ஆனால், இன்று கேட்கும் தமிழிசை எதிரொலிக்கு இந்தக் "குழாங்களே" காரணம் என்பதைத் தமிழர் அறிந்துகொள்ளுவது நலம். இந்தக் "குழாஙகளுக்கோ" பிழைப்புக்குப் பஞ்சமில்லை! பிழைப்புக்கு ஒரு சுலபமான வழியும் கண்டுபிடித்திருக்கின்றனர்! ஒரு பத்திரிகை ஆரம்பித்து, அதைக் காட்டிப் பணம் பறிப்பது எவ்வளவு இலகுவான வழி! பணம் வராவிட்டால் ஒரு வசை புராணம்; பாடினால் போதும்; உடனே கைமேல்காசு! இந்தச் சாதுர்யம் யாருக்கு வரும்? சுத்த தமிழருக்கு வருமா? ஒருபோதும் வராது; இந்தக் "குஞ்சு, குழாங்களுக்கு" இது சர்வ சாதாரணம்; தண்ணீர் பட்ட பாடு! ஆனால், இந்தக் "குஞ்சு, குழாங்களிடம்" தமிழர் ஏமாந்து வருகின்றனரே அதுதான் விந்தை! ஏமாந்த தமிழரை மொட்டையடித்து, இந்தக் "குஞ்சு குழாங்கள்" நன்றாகக் கொழுக்கின்றவே, அது இன்னமும் பெரிய விந்தை!

* * * *

இந்தக் "குஞ்சு குழாங்களுக்கு"த் தமிழிசை நாராசந்தான்! ஆனால், பகிரங்கமாக எதிர்க்கவோ தைரியம் கிடையாது. தமிழர் என்ன சொல்லுகிறார்கள்! தமிழிசை வேண்டும்; தமிழ் பாட்டுக்களே ஏராளமாகப் பாடவேண்டும்; பிற பாஷைப் பாட்டுக்களில் அவசியமான பாட்டுக்களைப் பாடலாம். அதில் தோஷமில்லையென்றுதான் சொல்லுகிறார்கள். ஆனால், தமிழிசையை வெறுக்கும் தனிக் "கும்பலும்", "குஞ்சு, குழாங்களும்" என்ன சொல்லுகின்றன? தமிழிசை, தமிழ் பாட்டுக்கள் அவசியந்தான்; வேண்டாமென்று யாரும் சொல்லவில்லை. ஆனால், தமிழ் பாட்டுக்களேயே ஏராளமாகப் பாடமுடியுமா? தமிழுக்கு இசையுண்டா, நாதமுண்டா? இசைக்குப் பாஷை என்ன வந்தது? தமிழ் பாட்டுக்களேயே கேட்டுக்கொண்டு இருந்தால், தமிழர் காது செவிடுபட்டுப் போகாதா? ஆகவே, பிற பாஷைப் பாட்டுக்களும் வேண்டும் என்று நாஸுக்காகச் சொல்லி, தமிழரை ஏமாற்றப் பார்க்கிறார்கள். அதே சமயத்தில் தமிழிசையையும், தமிழ் பாட்டுக்களேயும் மறைமுகமாக இகழ்கின்றனர்! தமிழிசையிலும், தமிழ் பாட்டுக்களிலும் தமிழருக்கும், இந்தக் கும்பல், குழாங்களுக்கும்" இருக்கும் வித்தியாசம் இதுதான்! இந்தச் சூழ்ச்சியையும், கபட வேஷத்தையுமே "தினமணி" ஆசிரியர் சொக்கலிங்கம் பகிரங்கமாக எடுத்துக் காட்டிக் கண்டித்தார். அன்றிருந்து, "தினமணி"யையும், தினமணி ஆசிரியரையும் இந்தக் "குஞ்சு குழாங்கள்" மறைமுகமாக எதிர்க்கப்புறப்பட்டன. இந்த எதிர்ப்புக்கு முதன் முதலில் இரையானர், மற்றொரு தமிழ் தினசரி பத்திரிகையான "பாரததேவி"யின் மாஜி ஆசிரியர் ஸ்ரீ. ஆர். வெங்கடராஜுலு நாயுடு. அவர் அரசியல் கொள்கை இருக்கட்டும்; அரசியலுக்கும், தமிழிசைக்கும் சம்பந்தமில்லை; அவர் ஒரு தமிழர்; தமிழிசையைத் தீவிரமாக ஆதரித்து வருகிறவர். அதில் எள்ளளவும் சந்தேகமே கிடையாது. அவர் தமிழிசையைத் தீவிரமாக ஆதரித்து எழுதியதால் ஆசிரியர் பதவியை இழக்கவேண்டியதாயிற்று. பத்திரிகை நிர்வாகிகளோ, வெறும் கதை சொல்லி மழுப்புகின்றனர்.

* * * *

ஸ்ரீ. நாயுடுவின் தாய்ப் பாஷை தெலுங்கு; ஆகவே, அவர் தமிழர் அல்லவென்று, அந்தத் தினசரியின் நிர்வாகிகள் சொல்லத் துணிந்தது அசட்டுத்தனம்; ஜாதித் திமிர் என்றே சொல்லவேண்டும். ஸ்ரீ. நாயுடு தமிழர் அல்லவென்றால், இந்த நிர்வாகிகள் சுத்தத் தமிழரோவென்று கேட்கிறேன். இந்த நிர்வாகிகள் கூட்டத்தில் ஒரு தமிழராவது உண்டா? "தமிழ் நாட்டிலே பிறந்து, தமிழ் நாட்டிலே வளர்ந்து, தமிழையே தாய்ப் பாஷையாகக் கொண்ட" இந்த நிர்வாகிகளுக்குத் தாய்ப் பாஷையில் பற்றுதல் அதிகம் உண்டு என்றால், தமிழ் இசையை, மறைமுகமாகவும், கிண்டலாகவும் வாள் வீச்சில் தாக்கி எழுத ஏன் அனுமதித்தார்கள்? அப்பொழுது அவர்கள் இரத்தம் கொதிக்கவில்லையா? தெலுங்கை தாய்ப் பாஷையாகக் கொண்ட ஸ்ரீ. நாயுடுவின் இரத்தம் கொதித்திருக்க, சுத்தத் தமிழரும், தமிழிசையைத் தீவிரமாக ஆதரிப்பவர் என்று சொல்லும் இவர்கள் இரத்தம் கொதிக்காமல் போனதேன்? இவர்கள் உள்ளத்தில் ஓடுவது உண்மையான தமிழ் இரத்தமா, அல்லது, வேறு இரத்தமா; அன்றி, வெறுந் தண்ணீரா? நிர்வாகிகளின் அறிக்கை முடிவில், "பாரத தேவி எப்பொழுதுமே, தமிழ் மக்களுக்காகவும், தேசீயத்துக்காகவும், தொண்டு ஆற்றிக் கொண்டு வருகிறது; அதுபோலவே என்றென்றும் செய்து வரும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தக் குறிப்பில் தமிழிசையை ஏன் அடியோடு மறந்துவிட்டார்கள்? தமிழிசையை அவர்கள் எதிர்க்கவில்லையென்பதை நிரூபிக்கவே அறிக்கை

(அடுத்த பக்கம் பார்க்க)

டம்-டம் குண்டு

(முன் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் தலை மொட்டை! - - தமிழிசை நாராசம்! எரிச்சலும், புகைச்சலும்! - - ஒரு ஐந்தாம் படை! கவர்னர் உஷார்!

வெளிவந்தது. கலியாணத்தில் தாலி கட்ட மறந்ததுபோல், அந்த அறிக்கையின் முக்கிய நோக்கமாகிய, தமிழிசையைப் பற்றிக் குறிப்பிட மறந்தது ஒரு விசித்திரமல்லவா? இது மட்டுமா? "மற்றவர்களைப் போலவே எங்களுக்கும் தமிழிசையில் அக்கரை உண்டு" என்று சொல்லுகிற இவர்களுக்கு, உண்மையிலேயே தமிழிசையில் அக்கரை உண்டென்ருல், அந்த அறிக்கையில் அதைக் குறிப்பிடாமல் நழுவ விடுவார்களா? "தமிழ் மக்களுக்காக" தொண்டு ஆற்றி வருமென்று குறிப்பிடும்போது, "தமிழிசைக்காகவும்" என்று ஒரு வார்த்தையைக் குறிப்பிடுவதால் குடி முழுகிப் போகுமா? தமிழிசையை இவர்கள் ஆதரிப்பவர்களென்ருல், இவர்கள் நிர்வாகத்தில் நடக்கும் "பிரீ பிரஸ்" தமிழிசையை எதிர்த்து வருவது இவர்களுக்குத் தெரியாதா; அல்லது, தெரிந்தும் கண்ணை மூடிக் கொண்டிருக்கிருர்களா? இது தமிழரை ஏமாற்றும் தந்திரமா, இல்லையாவென்று கேட்கிறேன். இந்த நிர்வாகிகள் என்னதான் முழும் பூசணிக்காயைச் சோற்றில் மறைத்தாலும், தமிழரை ஏமாற்ற முடியாது; தமிழர் அவ்வளவுக்கு அறிவற்றவர்களல்ல; உண்மைத் தமிழர் யார்; உண்மையில் தமிழருக்கும், தமிழுக்கும், தமிழ் இசைக்கும் தொண்டு செய்கிறவர்கள் யார் என்பதைத் தமிழர் அறிந்தே இருக்கிருர்கள். அவர்களை ஏமாற்றிவிடலாமென்று நினைப்பது தவறு; ஏமாறப்போகிறவர்கள் இந்த நிர்வாகிகளே!

* * * *

ஸ்ரீ. வெங்கடராஜுலு நாயுடு ராஜிநாமா செய்தது சம்பந்தமாகத் "தின மணி"யில் ஒரு அறிக்கை வெளிவந்தது. தமிழிசையை உண்மையாக ஆதரிக்கும் "தின மணி"யில் அந்த அறிக்கை வந்ததில் ஆச்சரியமொன்றுமில்லை. வேறு எந்தத் தினசரியாவது அவர் அறிக்கையை ஏற்றுக் கொண்டிருக்குமா? ஒருபோதும் ஏற்றுக் கொண்டிருக்காது. எல்லாம் "இனப்" பத்திரிகைகள்; தமிழிசையை எதிர்ப்பவை, ஆகவே, "தினமணி" ஒன்றுதான் அவர் அறிக்கையை ஏற்றுக்கொண்டு பிரசுரித்தது. அந்த அறிக்கையைப் பிரசுரித்ததற்காக "நிர்வாகிகள்", "தின மணி"மீதும், அதன் ஆசிரியர்மீதும் சீறி விழுந்திருப்பது முதல்தரமான "அயோக்யதனம்" அல்லவா? அதற்கு ஒரு "அருசையான" காரணம் கூறியிருப்பது இன்னமும் பெரிய "அயோக்யத்தனம்" என்பதை மறுக்கமுடியுமா? ஸ்ரீ. நாயுடுகாருக்குத் "தினமணி" ஆசிரியர் சொக்கலிங்கத்திடம் திடீரென்று, "குரு பக்தி" ஏற்பட்டுவிடவில்லை; பழையபடி குரு சிஷ்யன் முறையில் நடந்து கொள்ள வேண்டுமென்ற அபிப்ராயம் தோன்றி, விலகி, சிஷ்யராகப் போக நினைக்கவுமில்லை; ஸ்ரீ. நாயுடுகாருக்கு இந்த எண்ணமிருந்ததாகக் கூறும் நிர்வாகிகளுக்கு, இந்த கற்பனைகளை யெல்லாம் ஜோடித்து, எந்தக் குருவி சொல்லியதோ தெரியவில்லை! சினிமாக்களில் சுற்றித் திரியும் சிட்டுக் குருவி சொல்லியிருக்குமா? இருக்கலாம்! இன்றேல், அந்த "நிர்வாகிகளுக்கு" இவ்வளவு வேகமான யூகம் ஏற்பட நியாயமே இல்லை. ஸ்ரீ. நாயுடுவுக்குத் "தின மணி" ஆசிரியர் சொக்கலிங்கம் குரு; அவர் திடீரென்று குருவாகிவிடவில்லை. சுமார் 15 வருட காலமாகக் குரு. இன்று மகா பெரிய எழுத்தாளரென்று வீண் கர்வம் கொண்டு திரியும் "குஞ்சு, குழாங்களுக்கும்" இதே சொக்கலிங்கம் பிள்ளைதான் குரு! இல்லையென்று மறுக்க முடியுமா? ஸ்ரீ. நாயுடுவின் அறிக்கையை வெளியிட்ட "தின மணி" மீதும், அதன் ஆசிரியர் சொக்கலிங்கம்மீதும் குறைசொல்லத் துணிந்தது பொறுப்புடைய நிர்வாகிகளுக்கு அழகல்ல. தமிழிசையை ஆதரித்து, அந்த இயக்கத்தை வெற்றிபெறச் செய்ததால் ஏற்பட்ட பொருமையே இவ்விதம் குறைகூறக் காரணமாயிருந்திருக்கலாம்; அல்லது, ஸ்ரீ. சொக்கலிங்கம் பிள்ளையின் செல்வாக்கும், திறமையும், இவ்வித எரிச்சலுக்கும், புகைச்சலுக்கும் காரணமாக இருந்திருக்குமென்பதில் துளியும் சந்தேகமில்லை. அது எப்படியோ போகட்டும்; "இது சம்பந்தமான சர்ச்சையை இத்துடன் நிறுத்திக் கொள்ளுவதுதான்" இந்த நிர்வாகிகளுக்குப் புத்தி; இன்றேல், இந்தச் சர்ச்சை அவர்களுக்கே கேடாய் வந்து முடிந்தாலும் முடியலாம்.

* * * *

தமிழரையும், தமிழிசையையும் எதிர்க்கத் தமிழ் நாட்டில் ஒரு "ஐந்தாம் படை" இருப்பதுபோல், ஒவ்வொரு நல்ல இயக்கத்தையும் எதிர்க்க ஆங்காங்கு ஐந்தாம் படைகள் தோன்றி வருகின்றன. இன்று காங்கிரசுக்கு எதிராக ஒரு ஐந்தாம் படை தோன்றி இருக்கிறது! அந்த ஐந்தாம் படை ஒரிஸாவில்தான் தீவிரமாக வேலைசெய்து வருகிறது. காங்கிரஸ் பெயரால், ஒரிஸா சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ் அங்கத்தினர் சிலரே அங்கு ஒரு "ஐந்தாம் படையாக"த் திரண்டிருக்கிருர்கள்! இந்த "ஐந்தாம் படைக்குத் தலைவர் மிஸ்ரா. இவர் அங்கு ஒரு "பினமி" மந்திரி சபை ஏற்படுத்த, ஒரிஸா கவர்னரின் அங்கீகாரத்தைக் கேட்டிருக்கிருர். "ஐந்தாம் படையாகத்" திரும்பிய இவர்கள்மீது யாரும் குறை சொல்லவில்லை; ஆனல், இவர்கள் காங்கிரஸ் பெயரால் ஒரிஸா சட்ட சபைக்கு வந்தவர்கள். அவர்கள் என்று காங்கிரஸுக்கு விரோதமாகத் திரும்பினர்களோ, அன்றே, அவர்கள் சட்ட சபைப் பதவிகளை ராஜிநாமா செய்துவிட வேண்டும். அதுதான் முறை. அவர்களை ராஜிநாமா செய்யும்படி சர்தார் பட்டேல் மிர்ஸாவுக்குத் தந்தி கொடுத்திருக்கிருர். ஆனல், மிர்ஸாவும், அவருடைய "ஐந்தாம் படையினரும்" ராஜிநாமா செய்வார்களா? சந்தேகந்தான். கொடுத்த வாக்குறுதியை மீறிக் காங்கிரஸுக்கும், அவர்களைத் தேர்ந்தெடுத்த மக்களுக்கும் துரோகஞ்செய்யும் இவர்களை, ஒரிஸா கவர்னர் எப்படி நம்பத் துணிந்தார்? முதல் துரோகஞ் செய்த இவர்கள், கவர்னருக்கும் துரோகஞ் செய்யமாட்டார்களென்பது என்ன நிச்சயம்? யுத்த ஆதரவுக்காக ஒரிஸா கவர்னர், இந்த "ஐந்தாம் படையின்" உதவியை நாடுகிருர். "பினமி" மந்திரி பதவி ஏற்றுக்கொண்டபின் இவர்கள் அங்கும் "ஐந்தாம் படை" வேலை செய்ய முயற்சிக்கலாம்! ஒரிஸா கவர்னர் இவர்கள்மீது கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும்; இன்றேல், கவர்னரே ஏமாந்துபோக நேரிடலாம்! ஒரிஸா கவர்னர் உஷாராக இருப்பாரென்று நம்புகிறேன்.

பக்ஷிராஜா பிலிம்ஸ்

ஆர்யமாலா

(காத்தவராயன் கதை)

எம். ஆர். சந்தானலக்ஷிமி.

4-வது வாரம்

மதுரை	...	ஸெண்ட்ரல் சினிமா
கோவை	...	கர்ணுடிக் டாக்கீஸ்
திருச்சி	...	ராஜா டாக்கீஸ்
சேலம்	...	ஸெண்ட்ரல் டாக்கீஸ்
காரைக்குடி	...	ராமவிலாஸம் தியேட்டர்
மாயவரம்	...	சுந்தரம் டாக்கீஸ்
வேலூர்	...	ராக்ஸி டாக்கீஸ்
காஞ்சீபுரம்	...	முருகன் டாக்கீஸ்
புதுவை	...	லக்ஷ்மி டாக்கீஸ்

திருநெல்வேலி—நெல்லை டாக்கீஸ்

14-11-41 முதல் ஆரம்பம்

டிஸ்ட்ரிப்யூடர்ஸ்

நாராயணன் கம்பெனி, மதராஸ்.

அங்கும்-இங்கும்

கொடும் பசி தீருமா?

பேய் வரும் வேகம்!

மதில்மேல் பூனை!

சாகும்போது சங்கரா!

யார் தலையில் விடியுமோ?

யுத்தப் பேய் ஐரோப்பாவை விழுங்கிவிட்டது; ஐரோப்பாவை விழுங்கியும், அதன் கொடிய பசி தீரவில்லை. அது கிழக்கு நோக்கி வந்துகொண்டிருக்கிறது; ஆசியாவையும், அரபிய நாடுகளையும் எடுத்து விழுங்க முயற்சிக்கிறது. ஆனால், இந்தியாவை விழுங்கினலொழிய, அதன் கடும்பசி தீராதென்றே நினைக்கிறேன். யுத்தப் பேய் வரும் வேகத்தைக் கவனிப்போருக்கு, இந்தச் சந்தேகம் ஏற்படாமலிருக்க முடியாது! பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள்கூட இதை ஒப்புக் கொண்டிருக்கிருர்கள். ஜெனரல் வேவால் இந்தியாவுக்கு வந்திருப்பதின் ரகசியம் இதுதான்! இனிமேல் ஆசியாவில்தான் போராட்டம் மும்முரமாக இருக்கும்; ஜெர்மன் ராணுவங்கள் காகாஸஸ் பிரதேசத்தைக் கைப்பற்றியபின், இரான், இராக்கில் இறங்கலாம். அதே சமயத்தில் கருங்கடல் வழியாக, அல்லது, துருக்கி வழியாக ஜெர்மன் ராணுவங்கள் பாட்டும் என்னும் முக்கிய ரஷிய துறைமுகத்தைக்கைப்பற்றிப் பக்கூ எண்ணெய்க் கிணறுகளை நோக்கி வரலாமென்று பிரிட்டிஷ் உதவி உள்நாட்டு மந்திரியான லார்ட். கிரோப்ட் கூறியது ஞாபகமிருக்கும். இவர் கூறியது உண்மை; ஜெர்மனியரின் அடுத்த போர்த் திட்டம் அதுதான்; அதில் சந்தேகமே கிடையாது. இந்த யுத்தம் ஆப்ரிக்காவுக்கு வந்ததுமே, ஜெர்மனியரின் நோக்கம் என்னவென்பது வெட்ட வெளிச்சமாகிவிட்டது! சூயஸ் கால்வாயில்தான் ஹிட்லரின் கண்ணேட்டம் இருக்கிறதென்பது சந்தேகத்துக்கு இடமின்றித் தெரிந்து விட்டது. அதை இரு பக்கங்களில் சூழ்ந்து கொள்ள அவர் திட்டம் போட்டு ரஷியாவில் போராட்டத்தை ஆரம்பித்தார். ரஷியாவை நசுக்கவேண்டுமென்பது ஒரு நோக்கம்; ரஷியா வழியாகக் கிழக்கே வரவேண்டுமென்பது மற்றொரு நோக்கம். கிழக்கே வந்து சூயஸ் கால்வாயைச் சூழ்ந்துகொண்டால், மத்தியதரக் கடலிலுள்ள பிரிட்டிஷ் கடற்படைகளை அசையவிடாமல் செய்துவிட முடியும். அங்குள்ள படைகளுக்கு எந்தவிதமான உதவியும் வராமல் தடுத்துவிட யோசிக்கிருர். ஸ்பெய்ன் வழியாக வந்து ஜிப்ரால்டரையும் கைப்பற்றிக் கொள்ள அவர் தீர்மானித்திருக்கிருர். ஸ்பெய்ன் வழியாகவும், இதாலிக்கு அருகிலுள்ள கோர்ஸிகா, சார்டினியா, ஸிஸிலி முதலிய தீவுகளின் வழியாகவும், வட ஆப்ரிக்காவுக்கு ஏராளமான ஜெர்மன் ராணுவங்களையும் விமானங்களையும் அனுப்புவதின் நோக்கம் இதுதான். ஜெர்மன் ராணுவங்கள் பகிரங்கமாக ஸ்பெய்னுக்குள் இறங்குவதுதான் பாக்கி இருக்கிறது; ரஷிய யுத்தம் முடிந்ததும் ஹிட்லர் பகிரங்கமாக இந்த முயற்சியில் இறங்கலாம்!

ஃ ஃ ஃ

ஜிப்ரால்ட்டரை கைப்பற்றி, அதை முற்றுகை போட்டுக் கொண்டால், மத்திய தரக் கடலிலுள்ள பிரிட்டிஷ் கடற்படைகள் சொந்த பலத்தை நம்பியே போராட வேண்டி வரும். அமெரிக்காவிலிருந்து பிரிட்டனுக்குக் கிடைக்கும் உதவியையும் ஹிட்லர் தடுத்துவிட நினைக்கிருர். எல்லா வழிகளையும் முற்றுகை போட்டபின், ஆப்கானிஸ்தான் வழியாக இந்தியாவை எட்டிப்பார்க்க நினைக்கிருர். இந்த ஆபத்தை நன்கு உணர்ந்தே, கிழக்கே பிரிட்டிஷார் படைப் பலத்தை அதிகரித்து வருகிருர்கள். இரான், இராக், ஸீரியா முதலிய தேசங்களை மடக்கி, அங்கு ஏராளமான ராணுவங்களைக் கொண்டுபோய் வைத்திருப்பதற்கு இதுதான் காரணம். கிழக்கே அவர்கள் ஒரு பெரிய யுத்தத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருர்களென்பது இதிலிருந்து தெளிவாகிறது. ஆனால், துருக்கி இரண்டுங் கெட்டான் நிலைமையிலிருக்கிறது! மதில்மேல் பூனைபோல பதுங்கியிருக்கிறது! எந்தப் பக்கம் பாயுமோ சொல்ல முடியாது. கருங்கடலிலும், பல்கேரிய எல்லையிலும் ஜெர்மன் ராணுவங்கள் அதைச் சூழ்ந்து கொண்டிருக்கின்றன. ஸீரியா இராக், இரான் எல்லையில் பிரிட்டிஷ் படைகள் அதை வட்டமிட்டிருக்கின்றன. இந்த நிலைமையில் துருக்கி இன்னமும் நடு நிலைமை வேதாந்தம் பேசிக் கொண்டிருக்கிறது! மத்தியதரக் கடலிலுள்ள துருக்கிக்குச் சொந்தமான துறைமுகங்கள் ஜெர்மனிக்கு ரொம்ப அவசியமாக இருக்கின்றன. அந்தத் துறைமுகங்களை ஜெர்மனி கேட்கலாம்; துருக்கி ஒப்புக் கொண்டால் சரி; இன்றேல், அதைச் சாக்காக வைத்துக்கொண்டு துருக்கிமீது ஜெர்மனி படையெடுக்கலாம். ஆனால், துருக்கித் துறைமுகங்களை விடப் பாஸ்பரஸ் ஜலசந்திதான் இன்னமும் ரொம்ப முக்கியம். அந்த ஜலசந்திமீது, பிரிட்டனும், ஜெர்மனியும் கண் வைத்துக் கொண்டிருக்கின்றன. துருக்கி அதைக் கொடுக்க ஒருபோதும் சம்மதிக்காது.

ஃ ஃ ஃ

ஆனல், பிரிட்டனையோ, ஜெர்மனியையோ தனிமையாக எதிர்த்து நிற்கத் துருக்கிக்குச் சக்தி கிடையாது. அது ஒன்றில் ஜெர்மனியுடன் சேரவேண்டும்; இன்றேல், பிரிட்டனுடன் சேரவேண்டும். இரண்டுக்கும் தலையாட்டிக்கொண்டிருக்க முடியாது! ஜெர்மனிக்கு விரோதமாகப் போனல், ஜெர்மனி துருக்கிமீது பாய்ந்தே தீரும்; பாய்வதற்கு அது தயாராக இருக்கிறது. துருக்கி, பிரிட்டனுக்கு விரோதமாகப் போனல், துருக்கியைப் பிரிட்டன், ஸீரியா, இராக் எல்லைப்புறங்களிலிருந்தும், மத்தியதரக் கடலிலிருந்தும் தாக்க முடியும். கடைசியில் துருக்கி நிலைமை அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்ட கதையில்தான் வந்து முடியும்! என்ருலும், ரஷிய யுத்தத்தையே, துருக்கியின் எதிர்காலம் பொறுத்திருக்கிறது. சாகும்போது சங்கரா சங்கரா என்று சொல்லுவதுபோல், துருக்கி கடைசி நேரத்திலும் நடுநிலைமை வேதாந்தம் பேசிக்கொண்டு, யுத்தத்தில் சமரசஞ் செய்துவைக்கப் புறப்படுகிறது. தூதுபோகும் வேலையைத் துருக்கித் தலைவர் இனேனு, தலைமேல் போட்டுக் கொள்ளுகிருர்! இவருக்கு இந்த உத்தியோகம் கொடுக்க யாரும் தயாராக இல்லை. அவர் தானகவே இந்த உத்தியோகம் ஏற்றுக்கொண்டு, சமரசஞ் செய்வதாக இருந்தால்கூட, அவருடைய வார்த்தைகளைக் காதில் போட்டுக் கொள்ள யார் இருக்கிருர்கள்? சமரசம் ஏற்பட வேண்டிய கட்டம் கடந்து விட்டது; யாருக்கு வெற்றி தோல்வி என்பதை முடிவு கட்ட வேண்டிய கட்டத்துக்கு வந்துவிட்டார்கள். இந்தச் சமயத்தில் சமரசத்தில் யாரும் கவனஞ் செலுத்தப்போவதில்லை; துருக்கியைப்பாதுகாக்க, அதன் தலைவர் ஆசை கொண்டிருக்கலாம்; ஆனல், அவருடைய ஆசை, நிராசையாகப் போவது என்னமோ நிச்சயம்! துருக்கி அங்குமிங்கும் தலையாட்டிக் கொண்டு, நடுநிலைமை வேதாந்தம் பேசுவதைவிட, ஒரு சார்பில்போரை ஆரம்பிப்பதே சிறந்த வழி. வெற்றியோ, தோல்வியோ, தாழ்வோ, வீழ்வோ, எதையும் ஏற்றுக்கொள்ளத் துருக்கி தயாராக இருக்க வேண்டும்; வெறும்பேச்சும், வேதாந்தமும் இனிமேல் செல்லாது.

ஃ ஃ ஃ

ரஷிய வீழ்ச்சி துருக்கி தலையில் வந்து முடியும். அப்படியானல், துருக்கி வீழ்ச்சி எங்கு போய் முடியுமென்று கேட்கலாம். அது கீழ்த் திசை நாடுகளின் தலையில், விசேஷமாக இந்தியாவின் தலையில் வந்து விடியலாம்! அடுத்த போராட்டம், இந்தியாவுக்காகவே நடக்கப் போகிறது. இந்தியாவைத் தாக்கவேண்டுமென்பதுதான் அச்சு நாடுகளின் நெடு நாள் எண்ணம். அதை இரு பக்கமும் தாக்க யோசனைபோட்டிருக்கிருர்கள். அச்சு நாடுகளில் ஒன்ருகிய இதாலியின் குறுக்கு முறிந்து போயிற்று. அதன் குறுக்கை முறித்த ஹிட்லர், அதன் விஷப் பல்லையும் பிடுங்கி விட்டார்! விஷப் பல்லை இழந்து, ஹிட்லர் மகுடியில் மயங்கி, இதாலி ஆடிக்கொண்டிருக்கிறது! ஆனல், மற்றொரு அச்சு நாடான ஜப்பான், ஹிட்லரிடம் அவ்வளவு சுலபமாகச் சிக்கிக் கொள்ளவில்லை. அது ஹிட்லர் மகுடியில் மயங்கவுமில்லை; எட்ட நின்று வேடிக்கை பார்த்துச் சுயநலத்தில் கண்ணுயிருக்கிறது. அந்த யுத்தத்தில் இழுத்துவிட ஹிட்லர் முயற்சிக்கிருர்; கிழக்கே, ரஷியாவைத் தாக்கத் தூண்டுகிருர். ஜப்பான், பகிரங்கமாக யுத்தத்தில் இறங்காது போயினும், ரஷிய எல்லைப் புறத்துக்கு ஏராளமான ராணுவங்களை அனுப்பி இருக்கிறது. ரஷிய எல்லையில் சுமார் 8,00,000 ரஷிய ராணுவங்களிருக்கின்றன. ஜப்பானும், மங்கோலியா, மஞ்சுகோ எல்லைகளுக்குச் சுமார் 8 லட்சம் ராணுவங்களைக் கொண்டுபோயிருக்கிறது. ஆனல், ஜப்பானிடமுள்ள விமானங்கள், 3,000ந்தான்; இதில் சுமார் 1,000 விமானங்களே ரஷிய எல்லைக்குப் போயிருக்கின்றன; மீதியான ராணுவங்களும், விமானங்களும் சீனவிலிருக்கின்றன. ஆனல், இதுவரையில் ஜப்பான் ரஷியாவைத் தாக்கவில்லை; மாஸ்கோ விழுந்தால், ஜப்பான் ரஷியாவைப் பின்புறமிருந்து தாக்கலாமென்று சிலர் சொல்லுகிருர்கள். ஆனல், ஜப்பான், ரஷியாவைத் தாக்குமா என்பது சந்தேகந்தான். ஏன்? இந்த

(அடுத்த பக்கம் பார்க்க)



அங்கும் ❁ இங்கும்

விஷப் பல் போயிற்று! – ஹிட்லர் மகுடி!
ஆடும் பாம்பு!
மீசைக்கு ஆசையா? – தின்று கொழுக்க!

யுத்தத்தில் அகப்பட்டுக்கொள்ள ஜப்பான் தயாராக இல்லை; ஆனால், அதன் நாடு பிடிக்கும் ஆசையோ, அதைவிட்டுப் போகவில்லை. நாடு வேண்டும்; கடுநிலைமையும் வேண்டும்; யுத்தத்திலும் அகப்பட்டுக்கொள்ளக் கூடாது! இது கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை! என்பதுபோலிருக்கிறது; இதற்கு ஜப்பான் என்ன தந்திரம் செய்கிறதென்பதைக் கவனிப்போம்.

ஃ ஃ ஃ

ஜப்பான் மந்திரிகள், ஹிட்லர் தந்திரத்தையே கையாளுகின்றனர். ரஷியாவிடம் நாடு பிடிக்க இடமில்லை; நாடு பிடித்தால், சைபீரியா போன்ற பனிக்காடுகளைத்தான் ஜப்பான் கைப்பற்ற முடியும் அந்தப் பனிக் காடுகளை ஜெயித்து என்ன பயன்? ஜப்பான் வயிறு நிறையப் போவதில்லை! ஜப்பான் தின்று கொழுக்க, இந்தோ-சீனு, தாய்லந்து, டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள், பர்மா, இந்தியா போன்ற நாடுகளே ஜப்பானுக்குத் தேவை. ஆனால், இந்த நாடுகள்மீது ஜப்பான் பாயுமேயானால் பிரிட்டன், அமெரிக்கா, ரஷியா போன்ற நாடுகள் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. ரஷியா திடீரென மஞ்சுகோ, மங்கோலியாவில் இறங்கி ஜப்பானைத் தாக்கினால் என்ன செய்வது? அதற்குப் பயந்தே ரஷிய எல்லையில் அது ஏராளமான ராணுவங்களைக் கொண்டுவந்து குவித்திருக்கிறது! ரஷிய எல்லையில் ஜப்பான் ராணுவங்களைப் பாதுகாப்புக்காக வைத்து விட்டுத் தாய்லந்துமீது பாய்ந்து, அங்கிருந்து பர்மாமீது பாய ஜப்பான் யோசனை போட்டிருக்கலாம். இது ஹிட்லர் திட்டம் போலிருக்கிறது. ஹிட்லரும் ஜப்பானைத் தூண்டி விட்டிருக்கலாம். என்றாலும், ஜப்பானின் மண்ணாசையே இதற்குக் காரணமென்பதில் சந்தேகமில்லை. கிழக்கே ஒரு ஜப்பான் ஏகாதிபத்தியத்தை நிலைநாட்ட ஜப்பான் கொண்டிருக்கும் பேராசையைப் பூர்த்தி செய்து கொள்ள ஜப்பான் தந்திரமாக வேலை செய்து வருகிறது!

ஃ ஃ ஃ

இந்தியாவை இருபுறங்களிலும் ஆபத்து சூழ்ந்து வருவதையே நாம் கவனிக்கவேண்டும். கிழக்கே ஜப்பானும், வட மேற்கே ஜெர்மனியும் படையெடுத்து வந்தால், இந்தியாவின் கதி என்னவாகும்? ஹிட்லரின் இந்த முயற்சி பலிக்குமா? ஹிட்லர் இந்தியாமீது படையெடுத்துவருமுன், ரஷியாவை ஜெயிக்கவேண்டும்; ரஷியாவை ஜெயித்துவிட்டால்கூட, அவர் வெற்றி பூர்த்தியாகிவிடாது; பிரிட்டனையும் ஜெயிக்க வேண்டும்; பிரிட்டனை ஜெயிப்பதென்றால், அது சுலபத்தில் முடியக் கூடியதல்ல; அமெரிக்கா உதவியும் பிரிட்டனுக்குக் கிடைத்து வருகிறது; பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகளின் உதவியும் கிடைத்து வருகிறது. இந்த உதவிகள் கிடைக்காமல் தண்டிக்க, சூயஸ் கால்வாய், ஜிப்ரால்டர் முதலிய இடங்களை முற்றுகை போட வேண்டும். மத்தியதரக் கடல் ஆதிக்கம் ஜெர்மனிக்குப் போக வேண்டும். அட்லாண்டிக்கிலும், பாஸிபிக்கிலும் அச்சு நாடுகளின் ஆதிக்கம் ஏற்படவேண்டும். அட்லாண்டிக்கில் ஜெர்மனியர் ஆதிக்கம் இன்னமும் ஏற்படவில்லை; பாஸிபிக் சமுத்திரத்திலும், அப்படியே. மத்தியதரக் கடல் ஆதிக்கம் இன்னமும் பிரிட்டன் கையில்தானிருக்கிறது. அந்த ஆதிக்கத்தை நிலைநாட்டப் பிரிட்டன் கடைசிவரையில் போராடியே தீரும். அந்த ஆதிக்கத்தை நிலைநாட்டக் கருதியே, கிழக்கில், அதாவது இரான், இராக், ஸிரியா, எகிப்து முதலிய இடங்களில் பிரிட்டிஷார் ஏராளமான படைகளைக் கொண்டு வைத்திருக்கிறார்கள். ரஷியாவை முறியடித்து, ஹிட்லர், கிழக்கில் வந்தபோதிலும், கிழக்கில் அவர் தீவிர எதிர்ப்பை எதிர்பார்த்தேயாகவேண்டும். ஆகவே, ஹிட்லரின் இந்தியக் கனவு அவ்வளவு சுலபத்தில் நிறைவேறிவிடுமென்று எதிர்பார்க்க முடியாது!

ஃ ஃ ஃ

அட்லாண்டிக்கிலும், பாஸிபிக்கிலும் ஹிட்லர் பெரிய கடல் யுத்தத்தை ஆரம்பிக்க நினைக்கிறார். பிரிட்டன் படையெடுப்பு ஜெர்மனிக்குத் தோல்வியில் முடிந்தது. அட்லாண்டிச், பாஸிபிச் சமுத்திர யுத்தங்களில் ஹிட்லருக்கு வெற்றி கிடைக்குமென்ற நம்பிக்கை இல்லை. ஆனால், ஜெர்மன் சப்மரையன்களோ அமெரிக்கா கடற்கரையோரங்களைக்கூட நெருங்கி விட்டன. இதே சமயத்தில், ஜப்பான் சில அசட்டுத்தனமான அசாத்திய நிபந்தனைகளைப் போட்டு அமெரிக்காவைக் குழப்பிக் கொண்டிருக்கிறது. சீன விஷயத்தில் அமெரிக்கா பிரவேசிக்கக்கூடாது! கீழ் தேசங்களில் ஜப்பான் என்ன செய்தாலும், அதை அமெரிக்காவோ, பிரிட்டனே பார்த்துக் கொண்டிருக்கவேண்டும்; எதுவும் செய்யக்கூடாது என்பதுதான் ஜப்பானின் முட்டாள் கொள்கை. இதை அமெரிக்கா ஒப்புக் கொள்ளுமா? அமெரிக்கா ஜப்பான் பேச்சு முறிந்துபோகும் நிலைமையில் தானிருக்கிறது! அந்தப் பேச்சு வார்த்தைகள் முறிந்து போகாமல் பாதுகாக்க, ஜெர்மனியில் ஜப்பான் ஸ்தானிகராக இருந்த ஸ்பூரு குருஸூ அவசரம் அவசரமாக அமெரிக்காவுக்கு பறந்து போயிருக்கிறார்! ஆனால், ஜப்பான் "ஸ்குருலூஸ்" நிபந்தனைகளை, ஸ்பூரு குருஸூ தூதர் எப்படிப் பாதுகாத்துவிடப் போகிறாரோ, தெரியவில்லை! அமெரிக்கா-ஜப்பான் ஒப்பந்தம் ஏற்படப்போவதில்லை; ஜப்பான் யுத்தத்தில் இறங்கினால், அமெரிக்காவும் யுத்தத்தில் இறங்கியே தீரும். கடைசியில் உலகமே ஒரு பெரிய யுத்தத்தில் கட்டிப் புரளத்தான் போகிறது! முடிவு யுத்த நாடுகளின் கையில் இல்லை; அது கடவுள் கையிலிருக்கிறதென்று சொல்லலாம்!

ஆப்ரேஷன் தேவை இல்லை

"டான்ஸ்லிட்" அற்புதமாகக் குணப்படுத்தும்

தொண்டையிலும், உள்நாக்கின் இருபுறங்களிலும், நாசித் துவாரங்களிலும் சதை வளர்ந்து சுவாச அடைப்பை உண்டாக்கும் உபத்திரவங்களுக்கு "டான்ஸ்லிட்" ஒன்றுதான் பரம சஞ்சீவி.

விவரங்களுக்கு:— ஆலன்கிளினிக் இராயப்பேட்டை, மதராஸ்.

"டான்ஸ்லிட்" எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

15-11-41 சனிக்கிழமை முதல்

மகத்தான ஆரம்பம்

நாடக ரத்னம்

குப்பி வீரண்ணா

ஐயம்மா,

ஹொன்னப்ப பாகவதர்

நடித்த

கன்னட

ஸுபத்ரா

(மைசூர் மஹாராஜாவின் ஆதரவு பெற்றது)

சென்னை வெல்லிங்டன்

பூரண வினியோகஸ்தர்கள்:

(மைசூர், தென் கன்னடம், குடகு தவிர)

பாலாஜி பிலிம்ஸ்,

காந்தி நகர், :-: பெங்களூர் ஸிடி.

இன்னமும் என்ன சூழ்ச்சி?

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

“அது ஒன்றுமில்லை;...உங்களுக்கு ஏதோ புதிய சங்கடம் ஏற்பட்டிருக்கிறது...அதனால்தான்...”

“நான் திரும்பவும் சொல்லுகிறேன்...கமலம்...அப்படிப் புதிதாக எந்தவிதமான ஆபத்தும் ஏற்படவில்லை...நமது விதியை நினைத்துத்தான் அழுதேன்...”

“வேறு ஒன்றுமில்லையே?...”

“இல்லை...இதற்காகத்தான் அக்காளை ரொம்ப அக்கரையாக உன் அருகில் வந்து உட்காரும்படி அழைத்தாயோ?...கமலம்...நீ எப்பொழுதும் விஷமந்தான்!...”

“உங்களை நான் அழைத்தது தவறு என்றால் என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்...”

“பார்த்தாயா?......நான் தவறு என்று சொன்னேன்?......பாட்டி நீயும் கேட்டுக்கொண்டுதானே இருக்கிறாய்...”

“ஆம்...அக்கா, தங்கை சச்சரவில் நான் தலையிடவிரும்பவில்லை......ஆனால், கமலம் சொன்னதில் ஏதோ உண்மை இருக்கிறது...இல்லாவிட்டால், நீ என்னை உன் அறையிலிருந்து போகும்படி துரத்தியிருப்பாயா?...”

“கமலம் பார்த்தாயா?...உன்னால்.. உன் விஷமத்தால் பாட்டிகூட என்னைச் சந்தேகிக்க ஆரம்பித்துவிட்டாள்...”

“பாட்டியம்மா..இளவரசி தனிமையாக இருந்து அழுது, கண்ணீர் வடித்துச் சாந்தி பெறத்தான் உன்னை அங்கிருக்கவிடாமல் போகச்சொல்லி இருக்கிறார்கள்...வேறு விசேஷம் எதுவும் இருக்குமென்று நான் நம்பவில்லை...சரிதானே பாட்டி...” என்றாள் கமலம்.

“ஆமாம்...;கண்ணே மோகனா...ஏதேனும் புதிய ஆபத்து ஏற்பட்டால் சொல்லிவிடு......அதுதான் நமக்கு நன்மை;...இன்றேல்,...நாம் இன்னமும் பெரிய கஷ்டத்தில் சிக்கிக் கொள்ளவேண்டி வரலாம்...”

“பாட்டி, அப்படி ஒன்றுமில்லை...ஏதேனும் உங்களிடம் சொல்லக்கூடிய ரகசியங்கள் இருந்தால்...நான் சொல்லமாட்டேனா?...அப்படி ஒன்றும்...ஒன்றுமில்லை! அதிருக்கட்டும்; பாட்டியம்மா......நாம் ராணியைப் போய்ப் பார்க்கவேண்டுமா?...”

“அது உன் இஷ்டம்...”

“என் இஷ்டமா?...உன் இஷ்டம் என்ன?......அதையாவது சொல்...”

“ராணியம்மா...உன் சிற்றன்னை; உனக்குப் பார்க்க இஷ்டமிருந்தால் போகலாம்...நான் உன்னை அழைத்துக்கொண்டுபோகத் தயார்!...”

“பாட்டி சொல்லுவதிலிருந்து...ராணியம்மாவைப் பார்க்கவேண்டியது அவ்வளவு அவசியமில்லையென்றுதெரிகிறது...”

“ஆம்;......என்னைப் பொறுத்தவரையில், அவ்வளவு அவசியமில்லையென்றுதான் சொல்லுவேன்; ராணியம்மா உன்னைப் பார்க்கவேண்டுமென்று சொல்லி அனுப்பவில்லை...”

“மெய்தான்;......அப்படியானால் ராணியம்மாவை அப்புறம் பார்த்துக்கொள்ளலாம்......அதுவரையில் நான் இங்கு சிறிது இளைப்பாறிக் கொண்டிருக்கிறேன்...”

“அக்கா...அதுவரையில் நீங்கள் காத்திருக்கவேண்டியதில்லை...நீங்கள் புறப்படவேண்டியதுதான்...” என்றாள் கமலம்.

“என் கமலம்?...இருந்தாற்போல் ஜோசியஞ் சொல்லுகிறாய்!...”

“ஜோசியம் ஒன்றுமில்லை...அதிகாலையில் ரஞ்சிதம் வந்தது ஞாபகமிருக்கிறதோ?...”

“ஆம்...”

“அப்படியானால், அந்த ரஞ்சிதம் சும்மா இருப்பாளா?...அவள் உங்களிடம் சொன்னதோ......முழுப் பொய்!...அந்தப் பொய்யை மெய்யாக்க வேண்டாமா?......அதுவரையில் ரஞ்சிதம் கண் தூங்குவாளா...”

“மெய்தான் கமலம்...நீ சொல்லுவது சரிதான்...என்று சொல்லி மோகனா வாய் மூடுமுன் ரஞ்சிதமே அங்குவந்தாள்; அவளைக் கண்டதும், மோகனாவும், கமலமும் ஒருவரையொருவர் பார்த்துப் புன்னகை செய்தனர். ரஞ்சிதத்தை வாவென்று அழைத்து, என்ன விசேஷமென்று கேட்டாள் மோகனா.

“ராணியம்மா உங்களைப் பார்க்க விரும்புகிறார்கள்...”

“என்னையா?...அம்மா ரொம்பவும் மோசமான நிலைமையில்தான் இருக்கிறார்களோ?...”

“இளவரசி......ஆம்...நான் அப்பொழுதே சொல்லவில்லையா?...”

“ஆமாம்; சொன்னது...ஞாபகமிருக்கிறது...நான் பாட்டியை அழைத்துக்கொண்டு வர நினைத்தேன். அதற்குள் நீயே வந்து விட்டாய்...ரொம்பச் சந்தோஷம்...நீபோய் அம்மாவிடம் சொல்....இதோ...நான் வந்துவிட்டேன்...” என்றாள் மோகனா. ரஞ்சிதமும் அங்கிருந்து போய்விட்டாள். உடனே, மோகனா வேறு ஆடைகளை மாற்றிக்கொண்டு பாட்டியையும் அழைத்துக்கொண்டு, ராணியின் அறைக்குச் சென்றாள். அவர்கள் போனதும், கமலம் அறையை நன்றாக மூடித்தாழிட்டுவிட்டு அந்தரங்க அறைக்கு ஓடினாள். அங்கு அவள் யாரை எதிர்பார்த்துச் சென்றாளோ, அந்த மாய சேவகன் அங்குள்ள ஒரு சோபாவில் படுத்து அயர்ந்து நித்திரை போய்க் கொண்டிருந்தான். கமலம் அவனை உடனே எழுப்பவில்லை; அவன் படுத்திருந்த இடத்துக்குச் சற்றுத் தூரத்தில் போய் உட்கார்ந்து, அவனையே உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தாள். அவன் உருமாறி இருந்த போதிலும், அவன் அழகு குன்றவில்லை; கமலம் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து அவன் அழகைப் பார்த்துப் பூரிப்படைந்தாள்; அவள் உள்ளம் துடித்தது; விம்மினாள்! என்றாலும் அவனிடம் மதி மயங்கி விடவில்லை; இரவெல்லாம் விழித்திருந்ததால், அவளுக்கும் ஒருவித தூக்க மயக்கம் வருவது போலிருந்தது; வாய் திறந்து கொட்டாவி விட்டாள். அந்த அரவங் கேட்டு, மாயசேவகன் திடுக்கிட்டு விழித்தான்; எதிரே கமலம் உட்கார்ந்திருந்ததைக் கண்டு புன்னகை செய்தான்.

“கமலம்...எப்படி இங்கு வந்தாய்?...நான் இங்கு இருப்பது உனக்கு எப்படித் தெரியும்?...”

“ஏதோ குருட்டுப் போக்கில் வந்தேன்...தேடிப் போனமுள்...”

“ஆமாம்...நான் உனக்கு எப்பொழுதும் பொல்லாத முள்தான்!...”

“இருக்கட்டும்...அதனால் என்ன? என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளுங்கள்...”

“பாட்டி...மோகனா...எங்கே?...”

“ராணி அறைக்குப் போயிருக்கிறார்கள்...”

“ராணி அறைக்கா?...என்?...யார் அழைத்துக் கொண்டு போனது?...”

“ராணி நிலைமை ரொம்ப மோசமாக இருக்கிறதாம்!...ரஞ்சிதம் வந்து அழைத்துப் போனாள்...”

“உம்....அப்படியா?....ராணிக்கு என்ன?...”

“நிலைமை மோசமாக இருக்கிறதாம்!......ராணி......மோகனாவைப் பார்க்க விரும்பினாளாம்!...”

“அவ்வளவுதானா?...எல்லாம் வெறும்வேஷம்!...மோகனா...அங்கு ஏன் சென்றாள்?...”

“சென்றால் என்ன?...ஆபத்துண்டோ?...”

“ஒரு ஆபத்துமில்லை...ஆனால், ராணி என் மோகனாவை அழைத்தாள் என்பதுதான் எனக்குப் புரியவில்லை...”

“எல்லாம் ரஞ்சிதத்தின் சூழ்ச்சி...”

“யார் ரஞ்சிதமா?...கமலம்...என்ன நடந்தது?...உள்ளதைச் சொல்...விவரமாகச் சொல்...”

அன்று அதிகாலையில் நடந்த சம்பவங்களையெல்லாம் ஒன்றும் விடாமல் மாய சேவகனிடம் கமலம் சொன்னாள்; மாய சேவகன் பதில் சொல்லாமல் எல்லாவற்றையும் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்தான்.

“சரி....கமலம்....அப்படியானால், ரஞ்சிதம் இளவரசியின் அறையில் உளவு அறியவே போயிருக்கிறாள்...அங்கு அவள் ஏதேனும் அரவம் கண்டிருக்கவேண்டும்...”

“என்ன அரவத்தைக் கண்டிருப்பாள்?...அங்கு ஒன்றும் கிடையாதே?...”

“எப்படிச் சொல்ல முடியும்?...ஏதேனும் அரவமின்றி அவள் அங்கு போகத் துணிந்திருக்கமாட்டாள்...”

“அப்படியானால் மோகனாவை நீங்கள் சந்தேகிக்கிறீர்களா?...”

“மோகனாவைச் சந்தேகிக்க எனக்கு என்ன பைத்தியமா?...ஆனால்...”

“ஆனால்...என்ன?...என்னிடம் உள்ளதைச் சொல்லுங்கள்...”

“என்னால் இப்பொழுது ஒன்றும் சொல்ல முடியாது...இன்றிரவுதான் நான் முடிவு சொல்ல முடியும். நான் நான்...சரி இருக்கட்டும்...கமலம்...நீ சொன்ன விஷயங்கள் எனக்கு நல்ல உளவு;...உடனே போ...ரஞ்சிதம் ஏதேனும் சூழ்ச்சியில் இறங்குவாள்; ஒன்றில் உன்னைத் தேடி வருவாள்...இன்றேல்...அவள் இளவரசியின் அறைக்குள் திருட்டுத்தனமாகப் போக முயல்வாள்...சீக்கிரம் போ!...நான் உனக்கு உதவிக்கு வரத் தயாராக இங்கேயே இருப்பேன்...” என்றான் மாய சேவகன்.

கமலத்துக்கு ஒன்றுமே புரியவில்லை; மாயசேவகன் படபடத்து அங்கு மிங்கும் உலாவிக்கொண்டிருந்தான். அவனிடம் விவரமாகக் கேட்கக் கமலம் துணியவில்லை; உட்கார்ந்தபடியே மாயசேவகனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்; கமலம் அங்கிருந்ததைக்கூட மறந்து ஆழ்ந்து சிந்தித்துக்கொண்டிருந்த மாய சேவகன், திடீரெனக் கமலத்தை ஏறெடுத்துப் பார்த்தான்.

“கமலம்....கமலம்.....இன்னமும் இங்கேயா இருக்கிறாய்?...நீ போய் விட்டாய் என்றல்லவோ நினைத்திருந்தேன்!...போ...சீக்கிரம் போ...காரியத்தைக் கெடுத்துவிடாதே!...முன் யோசனையுடன் நடந்து கொள்” என்று சொல்லி, உட்கார்ந்திருந்த கமலத்தை அப்படியே செந்தூக்காய்த் தூக்கிக் கொண்டு நடந்தான். கமலத்தின் அறைக்குச் செல்லும் வாசலருகில் கொண்டுபோய் அவளை இறக்கினான்; கமலம் ஒன்றுமே பேசவில்லை; அவனையே உற்றுப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

“ஒன்றுக்கும் பயப்படாதே...! இன்றிரவு...நீ இங்கு வரலாம்...”

“விவரமாக எல்லாம் சொல்லுவீர்களா?...”

“ஆம்...இன்றிரவோடு என் வேலைகள் அநேகமாகப் பூர்த்தியாகுமென்று நினைக்கிறேன்...”

“அப்படியா?...ரொம்ப சந்தோஷம்!...நான் போய்வருகிறேன்” என்று சொல்லி மாய சேகவனிடம் உத்திரவு பெற்று, அந்தரங்க அறையைத் திறந்துகொண்டு அவள் அறைக்கு வந்தாள்... அவள் அறையைத் தட்டும் சப்தம் கேட்டு ஓடோடியும் போய்க் கதவைத் திறக்கப் போனாள்; ஆனால், அவள் நிலைமையை மறந்திருந்ததால், மீண்டும் படுக்கைக்கு வந்து, ஒரு துணியை எடுத்து நன்றாகப் போர்த்திக்கொண்டு, நிதானமாகக் கதவைத்திறந்தாள், ஆச்சரியமடைந்து நின்றாள்!

(தொடரும்)

50 ஆண்டுகளாய் பிரசித்தி பெற்ற

மதனமஞ்சரி

மாத்திரைகள்.

தாது கோளாறு, மலச்சிக்கல் ஸ்வப்பனஸகலிதம், இவைகளுக்கு மேன்மையான குணத்தைக் கொடுக்கும். ரத்தமும், தாதுவும் அதிகப்பட்டு, திரேகத்திற்கு புது உற்சாகம் உண்டாக்கும். 1 டப்பி ரு. 1.

ரமண விலாஸினி

ஒரு மணி நேரத்திற்கு முன் பாலுடன் சாப்பிடுவதால் கிழவரும்வாலிபர்களாக மாறுகிறார்கள். டப்பி ரு.1

மதனமஞ்சரி பார்மஸி,
184, சைனாபஜார், மதராஸ்.
G. வேணுகோபால் நாயுடு,
ஹனுமந்தராயன் கோவில் தெரு,
ஓட்டேரி. No. 13. மதராஸ்.

இந்தியா
தனிப் பிரதி
விலை ஒரு அணா,
இலங்கை
இந்தியாவுக்கு
வருட சந்தா 4-0-0.
இலங்கையில்
தனிப்பிரதி சதம் 7
ஆறு மாதத்திற்குக்
குறைந்த சந்தா
கிடையாது.

தமிழ் மணி

பர்மா
தனிப்பிரதி 0-1-6.
வருட சந்தா ரூ. 5.
மலாய்
தனிப்பிரதி சதம் 10
வருட சந்தா ரூ. 7.
ஒரு வருஷத்திற்கு
குறைந்த சந்தாவுக்
குப் பத்திரிகை
அனுப்பப்பட மாட்
டாது.

ஏழை என்றும் அடிமை என்றும் எவனுமில்லை, ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்ப திந்தியாவில் இல்லையே

என்று தணியு மிந்த சுதந்திர தாகம்?
என்று மடியுமெங்கள் அடிமையில் மோகம்?—பாரதி.

உங்கள் விவசாயத்தைச் செழிக்கச் செய்யும் வழி!

இந்தியரால் இந்தியர் உழைப்பால் இந்தியர் மூலதனத்தால்

உற்பத்தி செய்யப்படும் ரொட்ரிக்ஸ் கம்பெனியாரின்

கலப்பை மார்க்
இயற்கை உரம்

ரசாயன எருக்கள் உங்கள் நிலத்தின் செழிப்பைப்
)–: பாழாக்கிவிடுமென்பதை மறந்துவிடாதீர்கள். :–(

முக்கியமான இடங்களில் ஏஜண்டுகள் தேவை. விவரம் அறிய உடனே எழுதிக்கொள்ளுங்கள்.

ரொட்ரிக்ஸ் & கம்பெனி, போன் மில்ஸ், கடம்பூர் S. I. Ry., (திருநெல்வேலி ஜில்லா)

எ. எஸ். டி. எப். ரொட்ரிக்ஸ், காட்பாடி போன் மில்ஸ், காட்பாடி M. S. M. Ry., (வட ஆற்காடு ஜில்லா)

வாரங்கால் போன் மில்ஸ், வாரங்கால் (நிஜாம்)

வால்டயர் போன் மில்ஸ், வால்டயர் (B. N. Ry.,)

Edited Printed and Published by P. ALBIN FERNANDO, at the "TAMIL MANI" Press, 21, Sembudoss St, G. T. MADRAS.